Regd No. 2514. Swadesamitran Illustrated Weekly

வி.எச்.ஆர்
பருங்காயம்



ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிகுப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும். ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால் கேசுத்துக்குப் பதில் அடித்தலையே புலப்படும்.

எந்தக்காரணத்தால் உதிர்ந்தாலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச் செய்யுங்கள். இருக்கும் கூந்தலை இழக்காமல் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது. விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்.

கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 272, சுக்ரவார் பேடடை

ஆயுர்வேத ரத்ன எஸ். பி. பிள்ளையின்
நெக்டார்
சகல வயிற்று நோய்களையும் தீர்க்கும்
5 அவுன்ஸ் புட்டி மருந்துக்கு ரூ. 1—4—0.
பற்பொடி
பல் சுத்திக்கும், வியாதிகளுக்கும் சிறந்தது
20 பொட்டலங்கள் ரூ. 1—4—0
தபால்செலவு வேறு.
ஸ்வர்ண ஸ்டோர்ஸ்,
19, மீரான் சாயபு தெரு.
மவுண்ட் ரோடு :: சென்னை.



ஸ்ரீரங்கப்பட்டிணம் பாலம்

இந்த சரித்திரப் பிரஸித்தமான பாலம் ஆத்ம சுத்திக்காக காவேரி புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யப்போகும் ஆயிரக்கணக்கான ஜனங்களின் மனதிற்கு ரொம்ப பிடித்தமான நடமாட்ட ஸ்தலமாகும்.



இந்தியாவில் எங்கும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேக சுத்திக்காக குளிர்ச்சியானதும் உற்சாக மூட்டுவதுமான ஹமாம் ஸோப்பையே உபயோகிக்கவும் செய்கிறார்கள்.

ஹமாம் ஸோப்பின் புது வடிவத்தைக் கவனிக்கவும்.

டாம்கோ விற்பனை இலாகா,
நெ. 1, வாரன் ரோட், பீமன்பேட்,
மைலாப்பூர் — மதராஸ்.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

TS. 2943.

டோங்ரே
ப்ாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

★

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் முதல் பாகம் 2 0 0
இரண்டாம் பாகம் ரூ. 2. மூன்றும் பாகம் ரூ. 2.
(மூன்று பாகங்களும் ஒரே தடவையில் வாங்கும் சந்தாதாருக்கு ரூ. 4.)

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தாவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay: Phone 21343.

சுதேசமித்திரன்

Vol. 13 No. 53 31-1-'43 வாரப்பதிப்பு Price 2 Annas.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு 31-1-'43

'முதலில் காந்திஜி பிறகு கார்போ'

உலகப் பெரியார்களில் சுமார் ஆறுபேர் ஒரு கப்பலில் பிரயாணம் செய்வதாக வைத்துக்கொண்டு, அக்கப்பல் உடைந்துபோய், மேற்படியார்கள் ஒரு தீவில் அகப்பட்டுக்கொண்டால் அவர்களில் யாரை முதலில் காப்பாற்றவேண்டுமென்பதைப் பற்றி ஹிதகலினி காலேஜ் யூனியனில் ஒரு விவாதம் நடந்தது.

ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ். மகாத்மாகாந்தி, சியாங்கேஷேக், கிரேட்டா கார்போ, பர்னார்ட்ஷா, எம் ஸ்டாலின் இவர்களை பிரயாணிகளெனக் கற்பனை செய்துகொள்ளப்பட்டது.

"காந்திஜியைத்தான் முதலில் காப்பாற்ற வேண்டுமென்றும், பிறகு கார்போவைக் காப்பாற்ற வேண்டுமென்பதே ஜபல்பூர் வாசிகளின் அபிப்பிராயம்" என்று முடிவு கூறப்பட்டது.

* * * *

கராச்சியில் வெடிகுண்டு தொழிற்சாலை

24-ந்தேதியன்று பந்தர் ரோட்டில் உள்ள கட்டிடத்தில் வெடிகுண்டொன்று வெடித்ததையொட்டி அது புரட்சிக் கூட்ட தலைமைக் காரியாலயமாயும் வெடிகுண்டு தொழிற்சாலையாயும் இருந்ததென போலீஸ் அதிகாரியால் இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கிறது. அக்கட்டிடத்தில் கல்லூரி மாணவர்கள் இருந்தனராம்.

சிந்து மாகாணத்தில் ஆகஸ்டு மாதம் 9-ந்தேதியன்று காங்கிரஸ் இயக்கம ஆரம்பமானதிலிருந்து கைதியான காங்கிரஸ வாதிகளின் முழுப் பெயரும் விலாசமும் அடங்கிய ஜாபிதாவொன்று அக்கட்டிடத்திலிருந்து கைப்பற்றப்பட்டிருக்கிறது. சிறை சென்ற காங்கிரஸ் வாதிகளின் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகையும் அந்த ஜாப்தாவிலிருந்து வெளியாகிறது.

* * * *

"அப்னுகர்"க்குத் தடை

பம்பாய் பிலிம் போர்டாரால் அங்கீகரிக்கப்பட்ட அப்னுகர் என்ற படம் அகமதாபாத் ஜில்லா முழுதும் அங்கீகரிக்கப்படாத படமாகக் கருத வேண்டுமென பம்பாய் சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

* * * *

தேசியக் கொடி பறக்கக் கூடாது

கதரால் உற்பத்தி செய்யப்பட்ட இந்திய தேசீய கொடியை சென்னை மாகாணத்தின் ஸ்தல ஸ்தாபன கட்டிடங்கள் மீது பறக்கவிடக் கூடாதென்று தடை செய்து சென்னை சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

இந்த உத்தரவை மீறுவது காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்திற்கு ஆதரவளிப்பதாகக் கருதப்படுமென்றும் தெரிவித்திருக்கின்றனர். இது உடனேயே அமுலுக்கு வரும் என்று தெரிகிறது. சென்னை சம்பந்தப்பட்டவரை கார்பபொரேஷன் கட்டிடத்தின் மீது நகர சபை கூடும் பொழுதும் வேறு முக்கிய சந்தர்ப்பங்களிலும் காங்கிரஸ் கொடி பறக்க விடப்பட்டு வந்தது. காலஞ்சென்ற ஸ்ரீமான் கே. ஸ்ரீராமுலு நாயுடு மேயராக இருந்தபோது 1937-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 24-ந் தேதியன்று மேற்படி தீர்மானம் செய்யப்பட்டது.

* * * *

ஸ்ரீ கொண்டா வெங்கடப்பய்யா விடுதலை

ஸ்ரீமான் கொண்டா வெங்கடப்பய்யா எம். எல். ஏ. வேலூர் சிறையினின்று நிபந்தனையின்றி சென்னை ஸர்க்கார் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டார். ரத்தக் கொதிப்பினால் அவர் தேக அசௌக்கியமுற்றிருக்கிறார். சென்ற ஆகஸ்டு மாதமுதல் அவர் வேலூர் சிறையில் காவலில் இருந்து வருகிறார்.

* * * *

பிப்ரவரியில் புது காலணா

இந்திய சர்க்கார் அறிக்கையொன்று கூறுவதாவது:—

உருக்கப்படுவதால் காலணா நாணயச் செலாவணி குறையவில்லை. வருங் காலத்தில் செம்பு விலை ஏறுமெனக் கொண்டு கள்ளத்தனமாக உயர்ந்த விலைக்கு விற்க எண்ணி சேகரித்து வைப்பவர்களாலேயே அச்செலாவணி குறைந்திருக்கிறது. இந்த யோசனையுடன் மேலும் சேகரிப்பதைத் தடை செய்வதற்காக புதுமாதிரி காலணா 75-கிரெய்ன் எடைக்குப் பதில 30-கிரெயன் எடையில் வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

புதிய காலணா வட்டமாக இருக்கும்; அதன் குறுக்களவு 84 அங்குலம்; நடுவே வட்டமான துவாரம் இருக்கும். ஒரு பக்கத்தில் கொடியும மறு பக்கத்தில் மன்னர் தலையும் அச்சிட்டிருக்கும்; நாணயத்தின் மதிப்பு இங்கிலீஷ் ஹிந்தி, உருது முதலிய பாஷைகளில், தேதியுடன் பொறிக்கப்பட்டிருக்கும்.

பிப்ரவரி மாத ஆரம்பத்தில் புது மாதிரி காலணா செலாவணிக்கு விடப்படும்.

* * * *

ஸ்ரீமதி இந்திரா காந்தி கடிதம் எழுதலாம்

பண்டித ஜவஹரின் புத்திரியான ஸ்ரீமதி இந்திரா காந்தி குடும்ப காரியமாக அவரது உறவினருக்குக் கடிதங்கள் எழுதலாம் என்றும் அவர்களிடமிருந்து கடிதங்கள் பெறலாமென்றும் ஐக்கிய மாகாண சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள். அவரது தேக நிலை சரியாக விருப்பதாகவும் ஸிவில் சர்ஜன் கூறுகிறார்.

1 துருக்கிப் பத்திரிகைக்காரர்களுக்கு இந்திய ஸேனாதிபதி ஜெனரல் வேவல் ஓர் உபசாரம நடத்தினார். தூதுக்கோஷ்டியின் தலைவர் மிஸ்டர் அட்டேயுடன் வேவல் சம்பாஷிக்கிறார்.

2. டில்லி பத்திரிகைக்காரர்கள் சங்கம் கோஷ்டியாருக்கு ஓர் தேக்கச்சேரி நடத்தியபோது எடுத்த படம்.

3 ஆக்ரா கோட்டையிலுள்ள ஜிஹாங்கீர் அரண்மனையிலிருந்து கோஷ்டியார் வெளியே வருகின்றனர்.

துருக்கிப் பத்திரிகைத் தூதுக்கோஷ்டி

★

துருக்கியிலிருந்து பத்திரிகைக்காரர்களின் தூதுக் கோஷ்டியொன்று இந்தியா வந்திருக்கிறது. வந்து சுமார் 10 நாட்களுக்கு மேலாகின்றன. அக்கோஷ்டி இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரில் இங்கு விஜயம் செய்திருக்கிறது. இந்தியாவில் இன்றுள்ள நிலைமைபற்றி விஷயங்களை அறிவதே அக்கோஷ்டியின் உத்தேசம். 'பிரிட்டனின் நேசநாடு என்ற முறையில் நாங்கள் இந்தியா சந்தோஷமாகவிருப்பதைப் பார்க்க ஆவல் படுகிறோம்' என்று தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த எம்.ஸாடக் என்பவர் குறிப்பிட்டார். இப்போது நிலைமை சந்தோஷகரமாக இல்லையென்பதை அவர் உணர்ந்தே அங்ஙனம் சொல்லியிருக்கவேண்டும். பிரிட்டனுக்கும், துருக்கிக்கும் இந்த நெருக்கடியான சமயத்தில் நல்லுறவு இருந்து வருகிறதென்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவிலும் அந்த நிலைமை ஏற்படவேண்டுமென்பதுதான் எல்லோருடைய கோரிக்கையும். தூதுக்கோஷ்டியார் இன்னும் பல இடங்களுக்குச் செல்லவேண்டியிருக்கிறது. சுற்றுப் பிரயாணத்தை முடித்த பிறகு இந்தியாவின் லட்சியம் என்னவென்பதை ஒருவாறு அறிந்து அவர்கள் முடிவு கூறலாம். இந்தியாவுக்கு அனுகூலமான முறையில் அவர்கள் தங்களது செல்வாக்கை உபயோகிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர் போகும் போக்கு

சர்ச்சில்-ரூஸ்வெல்ட் சந்திப்பு

பிரஞ்சு மொராக்கோவி லுள்ள கஸபிளாங்காவுக்கு அருகே பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும் பத்து தினங்களாக கலந்து பேசிய விஷயம் இப்போதுதான் வெளியாகியிருக்கிறது. 1943-ல் நேசக்கட்சியினர் முன்னேறித் தாக்குவதுபற்றிய திட்டம் சம்பந்தமாக அவர்களிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. முக்கியமாக ரஷ்யாவுக்கு நிவாரணம் அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய கருத்து. ஸ்டாலினும் இம்மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டாராயினும் அவர் வரக்கூடவில்லை.

பிரஞ்சுத் தலைவர்களான டிகால், கிராட் இவர்களிருவருக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

* * * *

ஆப்பிரிக்க அரங்கம்

ரோமலின் படை மீண்டும் அதி வேகமாகப் பின்வாங்கிக் கொண்டிருக்கிறது. அப்படையில் ஒரு பகுதி டிரிபோலிடானியாவின் எல்லையைக் கடந்து டியுனிஸியாவுக்குள் பிரவேசித்துவிட்டதாகத் தெரிகிறது. அந்தப் படையைத் துரத்திச் சென்ற பிரிட்டிஷ் துருப்புகள் டிரிபோலியைக் கைப்பற்றி இப்போது அதற்கு மேற்கே நெடுந் தூரம் சென்றிருக்கின்றன. இத்தாலி தனது ஆப்பிரிக்க சாம்ராஜ்யத்தை அடியோடு இழந்துவிட்டதென்றே சொல்லலாம்.

டிரிபோலிடானுவில் இதுவரை பெரிய யுத்தமெதுவும் நடக்கவில்லை. ரோமலின் படை தீவிரமாக எதிர்க்காமலேயே ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே எதிரிகளை முறியடித்து விட்டதாகச் சொல்லமுடியாது. தங்கள் துருப்புகளைக் கூடியவரை சேதமின்றி டியுனிஸியாவுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமென்பதே அவர்களது கருத்தாயிருக்க வேண்டும். அவ்வெண்ணம் ஈடேறவிட்டால் அந்தப் போர்முனையில் நேசக்கட்சிக்கு எதிர்ப்பு வலுத்துவிடும். மேலும் டியுனிஸியாவுக்குள் எல்லைப்புறத்தில் தற்காப்புப் போர் புரிவதற்கு வசதியான அரண்கள் அமைந்திருக்கின்றன. அவ்வரண்கள் முன்பு பிரஞ்சுக்காரர்களால் இத்தாலியரது படையெடுப்பைத் தேக்குவதற்காக அமைக்கப்பட்டவை. ரோமலின் படைகள் ஏற்கனவே டியுனிஸியாவிலுள்ள அச்சுப்படைகளுடன் சேர்ந்தால், அங்கு எதிரி வசமுள்ள விசேஷ அனுபவம் வாய்ந்த துருப்புகளின் தொகை சுமார் ஒன்றரை லட்சமாகிவிடும் என்று சொல்லப்படுகிறது.

* * * *

ரஷ்யப் போர்முனை

ரஷ்யத் தாக்குதலின் வேகம் அதிகரித்தவண்ணமாயிருக்கிறது. அவர்கள் எய்தும் வெற்றிகள் உலகை ஸ்தம்பிக்கச் செய்து வருகின்றன. சென்ற பதினாறு மாதங்களாக நாஸிகள் லெனின்கிராடைச் சுற்றி இட்டிருந்த முற்றுகையை சோவியத் படைகள் பிளந்துவிட்டன. அந்நகருக்குக் கிழக்கே இருபத்தைந்து மைல் தூரத்திலுள்ள ஷ்லுஸல்பர்க் என்ற கேந்திர ஸ்தானத்தையும் ஜெர்மனியர் பறிகொடுத்துவிட்டனர். இப்போது லெனின்கிராட் நகரத்திற்குள்ளிருக்கும் ரஷ்யருக்கு உணவும், தளவாடங்களும் தங்கு தடையின்றி போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த முற்றுகை தகர்ந்ததன் மூலம் ஜெர்மனிக்கும், பின்லாந்துக்கும் தரை மூலம் நேரடியாக இருந்த தொடர்பு மறைந்து விட்டது. பின்லந்து ஒருக்கால் தனி சமாதானத்திற்கு உடன்படலாமென்று நேச வட்டாரங்களில் கூறப்படுகிறது.

* * * *



வாரனேஷில் வெற்றி

மத்தியப்பகுதியில் வெலுகிலுகியைப் பிடித்த ரஷ்யத்துருப்புகள் தென்மேற்கேயும், வடமேற்கேயும் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. வாரனேஷ் முனையிலிருந்து சோவியத்படை துவக்கிய தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது. வாரனேஷில் ஒரு பகுதியில் இருந்த நாஸிகள் இப்போது விரட்டியடிக்கப்பட்டு விட்டனர். கார்காவ், கர்ஸக் இவ்விரு பெரிய எதிரித் தளங்களுக்கும் ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது. தெற்கேயுள்ள ராஸ்டாவின் கதி இன்னும் சில தினங்களில் முடிவாகிவிடுமென்று தோன்றுகிறது. அந்நகருக்கு வடக்கேயுள்ள பல ரயில் நிலையங்கள் சோவியத் வசமாகிவிட்டன. தென்கிழக்கேயிருக்கும் ஸால்ஸ்க் என்ற முக்கிய ஜங்ஷனையும் எதிரிகள் இழந்துவிட்டனர். காகஸஸிலும் ரஷ்யருக்கு மகத்தான வெற்றி, ஆர்மவிர், வோரோஷிலோஸ்க் இவ்விரு பெரிய ரயில் நிலையங்களையும் அவர்கள் கைப்பற்றிவிட்டனர். கியுபனிலிருந்தும், ஸால்ஸ்கிலிருந்தும் செல்லும் ரயில்பாதைகள் சந்திக்கும் ஜங்ஷனான டிரோரஸ்கை ரஷ்யர் நெருங்கிக் கொண்டிருக்கின்றனர். கியுபன் பகுதி முழுதிலும் ராஸ்டாவுடன் உள்ள ரயில் தொடர்புகளுக்கு ஆபத்து நேருமோவென ஜெர்மனியர் அஞ்சுகிறார்கள். அத்தொடர்புகள் துண்டிக்கப்படுமாயின், மேற்கு காகஸஸிலுள்ள ஜெர்மன் படைகள் தப்ப வழியில்லாமல் போய் விடும்.

* * *

தென்மேற்கு பஸிபிக்

நியுகினியில் பாபுவா பகுதியிலிருந்த ஜப்பானியர் அனைவரும் விரட்டியடிக்கப்பட்டனர். அங்கு அவர்களது கடைசிக் கோட்டையாக இருந்த ஸனனந்தாவை நேசப்படையினர் கடும்போராட்டத்திற்குப் பின் கைப்பற்றினர். ஆனால் நியுகினி தீவில் இன்னும் லே, ஸலாமுவா போன்ற கேந்திர ஸ்தானங்கள் எதிரிவசமிருந்து வருகின்றன. நேச விமானங்கள் அவை மீது குண்டு வீசி வருகின்றன. குடால்கனாலில் சில முக்கிய ஸ்தலங்களை நேசக் கட்சியினர் கைப்பற்றியிருக்கின்றனர். எனினும் அத் தீவிலிருந்து எதிரிகளை விரட்டியடிக்க நாளாகுமென்று தோன்றுகிறது. தென்மேற்கு பஸிபிக்கில் எதிரியின் முக்கிய தளமான ராபாலை நேச விமானங்கள் தீவிரமாகத் தாக்கி வருகின்றன.

நியூகினியில் ஸனனந்தாவைக் கைப்பற்றியதுபற்றி ஆஸ்திரேலிய ராணுவ மந்திரி வியாக்கியானம் செய்கையில் எதிரிகள் தங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் திரும்பத் தாக்குவரென்றும், தென் மேற்கு பஸிபிக் போர் இரண்டாந்தரமானதென்று இப்போது யாரும் எண்ணவில்லையென்றும் தெரிவித்தார். ஆனால் நியுஸிலந்துவிமானப் படையின நிர்வாகத் தலைவரான கடார்ட் என்பவர் நேசக் கட்சி தீவிரமாக முன்னேறி ஜப்பானியரைத் தாக்கி யொழிக்க திட்டம் அமைத்து வருவதாகக் கூறியதுடன், அத்தாக்குதல் என்று ஆரம்பமாகுமென்பது ஐரோப்பாவிலுள்ள அச்சு நாடுகள் ஒடுக்கப்படும் வரை தெரியாதிருக்கலாமென்று சொல்லுகிறார்.

ஜப்பானில் பாதாள மார்க்கம்

டோக்கியோவுக்கும், நாகசாகிக்கும் இடையே இருக்கும் 6 மைல் தூரத்திற்கு சமுத்திரத்திற்குக் கீழே போகும் ஒரு பாதாள வழியை அமைக்க ஜப்பானியர் ஏற்பாடு செய்து வருகின்றனர். இவ் வருஷம் இந்த வழி திறந்துவிடப்படும். ஜப்பானியர் இவ்விதம் இரண்டாவது முறையாக ரகசிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

இதற்கு முன்பு திறக்கப்பட்ட பாதாள வழியைப்பற்றி சமீபத்தில்தான் வெளியார் அறிந்தனர்; 6 வருஷ காலம் 10 லக்ஷம் பேர் அதற்காக வேலை செய்தனர்; 25 லக்ஷம் பவுன் செலவாகியது.

ஜப்பானில் இருக்கும் நான்கு பிரதானக் கப்பல் தளங்களில் நாகசாகியும் ஒன்றாகும். இங்கு பிரும்மாண்டமான கப்பல்களைக் கட்ட வசதி யுண்டு.

* * * *

இராக் பாலைவனத்தில் ரயில் பாதை

சென்ற மாதத்தில் ரஷ்யாவுக்குத் துரிதமாக சப்ளைகளை அனுப்ப உதவியாக இருக்கக்கூடிய புதிய ரயில் பாதை இராக் பாலைவனத்தில் வேலை செய்ய ஆரம்பித்ததாக லண்டனில் அறிவிக்கப்பட்டது. இந்த இருப்புப் பாதை 120 மைல் நீளமிருக்கிறது. தகிக்கும் வெயிலிலும், புழுதிப் புயலிலும் சிற்சில சமயங்களில் பெய்த பெருமழையிலும் இந்திய ராணுவம் தினம் ஒரு மைல் வீதம் இந்த இருப்புப் பாதையை அமைத்தது.

* * * *

இன்னொரு அச்சு ஒப்பந்தம்

ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன. இவை ஏற்கனவே யுள்ள மூன்று தேச ஒப்பந்தத்தைப் போலவே செல்லுபடியுள்ளவை என்றும் பொருளாதார நிலையிலிருந்து அவைகளுக்கு அனுபந்தம் போல் உதவுமென்றும் ஜெர்மன் நியூஸ் ஏஜென்ஸி கூறுகிறது.

* * * *

சீனு விதிக்கும் நிபந்தனை

லண்டனில் இருக்கும் சீன ஸ்தானிகர் டாக்டர் வில்லிங்டன் கூவின் மனைவி ரேடியோ மூலம் செய்த பிரசங்கத்தில் சமாதான ஒப்பந்தத்தில் சீனுவுக்கு ஜப்பானியக் கப்பற்படை கொடுக்கப்பட வேண்டும என்பதும் முக்கியமாக விதிக்கப்படும் என்று சொன்னார்.

* * * *

மாதம் 10 லக்ஷம் டன் நேசக் கப்பல்கள் நாசம்

பிரிட்டனையும், அமெரிக்காவையும் இதர நேச தேசங்களையும் சேர்ந்த கப்பல்களில் மாதம் சுமார் 10 லக்ஷம் டன் எடையுள்ள கப்பல்கள் மூழ்குவதாக வாஷிங்டனிலுள்ள உத்தியோ கப்பற்றற்றவர்கள் மதிப்பிடுகின்றனர்.

* * * *

இயற்கைப் பாட்டு

★

(ஸ்ரீ கி. வ. ஜகந்நாதன்)

உலக முழுதும் சங்கீத மயம்: இசையினிமை சூழ்ந்தது இயற்கை. இயற்கையின் எழிலைக் கண்டு இன்புறுவதற்குச் சிலரே கண்படைத்திருக்கிறார்கள். அவ்வாறே இயற்கையில் எழும் இன்னிசையைக் கேட்டு நுகரும் ஆற்றல் சிலருக்கே இருக்கிறது. காற்று, மரங்களுக்கிடையிலே மெல்லத் தவழ்ந்து அவைகளின் இலைகளை அசைத்துப் பாடுவதைக் கேட்பவர்கள் எவ்வளவு பேர்! ஒவ்வோர் இலையும் காற்றென்னும் இசைப்புலவனுக்கு ஒவ்வொரு ஸ்வரஸ்தானமாக உதவுகிறது. மலை அருவி தாவிக் குதித்துத் தவழ்ந்து வருகிறதே; அதன் ஓட்டத்திலே அமைந்திருக்கும் ஒல்லொலியின் இன்னிசையை எல்லோரும் அனுபவிக்க முடிகிறதா? வீணையின் ஸ்வரஸ்தானங்களின் மேல் நடக்கும் விரல் இசையை உண்டாக்குகிறது; அருவியெனும் மங்கை மலையையே வீணையாக்கித் தன்னுடைய ஓட்டத்திலேயே ஸங்கீதத்தைப் பிறப்பிக்கிறாள். அவள் தாண்டிக் குதிக்கும்போது முத்தாய்ப்பு விழுகிறது; மெல்லனச் செல்லும் போது நிரவல் செய்கிறாள். ஆற்று நீர் ஓசையிலே அமைந்து அடங்கி எழும் நாதத்திலே இசையின் இனிமை இருக்கும் ரகசியத்தை யார் அறிந்திருக்கிறார்கள்? வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழங்கும் கடல் சதா ஓலமிட்டுக்கொண்டிருக்கிறதே; அதனுடைய பிரணவ கோஷத்தைச் செவியால் நுகரும் உள்ளம் படைத்தவர்கள் எத்தனை பேர்! உலகத்துப் பேரொலியெல்லாம் அடக்கி மீதூர்ந்து எழுந்து இசைக்கும் அந்த மகோததியின் நாதத்திலே தோற்றும் பேரமைதியை உணர்ந்தவர் யார்?

இந்த இனிய இயற்கைச் சங்கீத உலகத்திலே நாமெல்லாம் செவிடர்களாகத்தான் நடமாடுகிறோம். தினந்தோறும் கேட்டாலும் அதன் அளவில் நம் காது மரத்துவிடுகிறது. ஆனால் இந்த இன்னிசையை அனுபவிக்கும் ஜாதியினர் உலகத்தில் இருக்கிறார்கள். அதிகமாக இல்லை; சிலரே இருக்கிறார்கள். மனிதனுடைய உள்ளமாகிய காடாந்தகாரக் குகையிலே ஒளிந்திருக்கும் எண்ணங்களை யார் உணருகிறார்களோ, மனித உள்ளத்திற்கு எட்டாத கற்பனைச் சிகரத்தையும் அவனது மனம் ஆழம் காணமுடியாத கருத்தாழத்தையும் தங்கள் சிருஷ்டியிலே வைத்து மலைகளையும் கடல்களையும் யார் உண்டாக்குகிறார்களோ, கல்லும் புல்லும், இலையும் தளிரும், மரமும் மலையும் நமக்கு ஊமைகளாயிருக்க அவற்றின் பாஷையை உணர்ந்து தெய்வத்தின் திருக்கையழகைத் தெளிந்து யார் வெளிப்படுத்துகிறார்களோ, மின்னல் வெட்டுப் போன்ற சில வார்த்தைகளிலே மக்களுடைய முரட்டு இதயத்தைப் பண்படுத்த யார் வல்லவர்களோ அந்த மேதாவிகள் அந்தத் தெய்வப் பிறப்பினராகிய கவிஞர்கள் இந்த இசையை நுகர்ந்து நுகர்ந்து மகிழ்கிறார்கள்.

பாரதியார்

பாரதியார் இந்த இயற்கைச் சங்கீதத்திலே மனத்தைப் பறிகொடுத்தவர்.

"காணப் பறவை
கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக்
காட்டும இசைகளிலும்
ஆற்று நீர் ஓசை
அருவி யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந்
நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே
உதிக்கும் இசையினிலும்
......நெஞ்சைப்
பறிகொடுத்தேன்
பாவியேன்!" (குயில்)

மிகவும் கூர்மையான காது படைத்தவர்களைத் தமிழில் "எலிக்குச் செவி படைத்தவர்கள்" என்று சொல்வார்கள். பாரதியாரும் அவரோடு சேர்ந்த கவிஞர் கூட்டத்தினரும் எலிக்குச் செவி படைத்தவர்கள். முதல் தரமான காதுகளையுடையவர்கள். நாமோ மரச்செவிபடைத்தவர்கள் மூன்றாந்தரமான காதுகளைப் பெற்றவர்கள்.

இரண்டாந்தரமொன்று நடுவிலே இருக்கிறது. இயற்கைச் சங்கீதம் இயற்கைத் தேவியின் நடனத்திலே, ஒய்யாரச் சிரிப்பிலே உல்லாஸ நடையிலே உண்டாவது. மனித லோகத்திலே, ஒருவகை இயற்கைச் சங்கீதம் உண்டு. அதில் இயற்கையின் மணம் அதிகமாகவும் செயற்கையின் மணம் கொஞ்சமாகவும் இருக்கின்றன. முன்னே சொன்ன இசையிலே பாட்டு இல்லை; வெறும் இசைதான் இருக்கிறது. இப்போது சொல்லும் சங்கீதத்திலே பாட்டும் இருக்கிறது. பாட்டென்றால் கவிதையும் கூட வருவதுதானே? இந்தச் சங்கீதத்தைக் கூடக் கேட்க 'நாகரிகம் படைத்த' நமக்குக் காதுகள் இல்லை.

இந்தப் பாட்டிலே ஓசை இனிமையும் கருத்தழகும் மலிந்து கிடப்பதை நாம் உணர்வதில்லை. சங்கீதக் கச்சேரி யென்று பேர் வைத்துக்கொண்டு அதற்கு ஓர் இடமும் பக்க வாத்தியங்களும் காலமும் நிர்ணயித்துப் பாடுகிற செயற்கையிசையிலே மயங்கிக் காசு கொடுத்துக் கேட்கப் பழகின நமக்கு இந்தப் பாட்டிலே நாட்டம் செல்வதில்லை.

வயல் வெளியிலே ஏற்றத்தால் தண்ணீர் இறைக்கிறார்களே அங்கே நடைபெறும் இயற்கைச் சங்கீதக் கச்சேரியைக் கேட்க விருப்பமுள்ளவர்கள் போய்க் கேளுங்கள். ஏற்றத்தில் ஏறி மிதிப்பவன் ஒருவன், கீழே சால் பிடிப்பவன் ஒருவன்—இந்த இரண்டு பேர்களே அந்தக் கச்சேரியை நடத்துகிறார்கள். ஏற்றமும் சாலுமே பக்க வாத்தியங்கள். முக்கியமான சங்கீத வித்துவான் சால் பிடிப்பவன். அவன் பாடும் பாட்டிலே இசை பொங்குகிறது. கருத்து உள்ளடங்கி நிற்கிறது. இரண்டையும் உணர்ந்து இன்புறுபவர்கள் உலகத்தில் சிலரே. வான விதானத்தின் கீழே பச்சைப் பயிரின் அழகு படர்ந்த பரப்பில், ஏற்ற நீர் ஓடும் சலசலப்பு ஒலி சுருதிபோட, சாலை முகக்கும் போதும் மேலே கவிழ்க்கும் போதும் தாளம் பிறக்கப் பாடும். அந்த ஏற்றக்காரர்களுடைய சங்கீதம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், ஓர் இடத்திற்குள் சிறைப்படவில்லை. அவர்கள் உள்ளம் விரிந்து உவகை பொங்கும் போது வேலையிலே முனைகிறார்கள். அவர்கள் உடல் முழுதும் வளைந்து வேலை செய்யும்போது அதனால் உண்டாகும் தேக சிரமத்தை அந்த இனிய பாட்டு மறக்கச் செய்கிறது. அவர்களுடைய உழைப்பில் சங்கீதம் இன்பத்தைப் புகுத்துகிறது. தம்மை மறந்து உழைக்கும் அவர்களுக்கு அந்த இசையே நிழலாகவும் சோறாகவும் இருந்து சிரமபரிகாரம் செய்கிறது. சங்கீதம் பாடுபவனுக்கும் கேட்பவனுக்கும் ஒருங்கே இன்பமூட்டுகிறதென்ற தத்துவத்தை அவர்களிடம் நாம் தெளிவாகக் காணலாம். ஏற்றப் பாட்டு ஒன்று தானா? நெல் இடிக்கும் பெண்கள், காரை குத்தும் மங்கையர் முதலிய மெல்லியலார் கூட்டத்திலே பிறக்கும் நயமான இசையைக் கேட்டுப் பாருங்கள். கும்மியடிக்கும்போது அவர்கள் வளைக்கரங்கள் குலுங்கபபாடும் சங்கீதத்திலே உண்டாகும் இன்பத்துக்கு ஈடு உண்டா?

பாரதியார் இயற்கையோடு இணைந்த இந்த இசையிலும் மனசைப் பறிகொடுத்துவிடுகிறார்.

"ஏற்ற நீர்ப் பாட்டின்
இசையினிலும்
நெல் இடிக்கும்
கோற்றொடியார்
குக்குவெனக் கொஞ்சும்
ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார் தம்
சுவை மிகுந்த
பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல
பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள்
தாம் ஒலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர்
கூட்டமுதப்
பாட்டினிலும்
...நெஞ்சைப் பறி கொடுத்தேன்
பாவியேன்"

(16-ம் பக்கம் பார்க்க)

அந்தராத்மா

★

"கார்த்திகை"

மொகலாய சாம்ராஜ்யத்தின் நிழல் பாரத பூமி முழுதும் படர்ந்திருந்த காலம், கலைப்பித்தனான ஸலீம் அரச சிம்மாசனம் அப்பொழுது தான் ஏறினான். நெடு நாட்களாக அவனுடைய இருதயத்தை உறுத்திக் கொண்டிருந்த விஷயம் அவன் கண் முன் தோன்றியது. ஆனால் ஜிஹாங்கீர் எப்பொழுதுமே ஆழ்ந்து சிந்தனை செய்பவன்.

"நாக சிம்மா! நாளையிலிருந்து உன்னைப்பிரதம சேனாதிபதியாக நியமித்திருக்கிறோம்" என்றான் ஜஹாங்கீர்.

நாக சிம்மனின் முகம் பிரமித்துப் போய் விட்டது. அவனுடைய விரிந்த முகத்தில் எத்தனையோ மாறுதல்கள் தெரிந்தன.

"ஏன் திகைக்கிறாய்: நீ தான் சேனாதிபதி" என்று மீண்டும் ஜஹாங்கீர் கூறினான். உக்காவின் குழலிலிருந்து புகை சுருண்டு சுருண்டு வெளிவந்து கொண்டிருந்தது.

"உண்மையாகவா? அப்படியானால் தங்கள் சித்தம். என் பாக்கியம்" என்று நாகசிம்மன் ஆனந்தத்துடன் கூறினான். அவனுடைய இரு விழிகளிலிருந்தும் ஆனந்த பாஷ்பம் சொரிந்தது இருக்காதா? நேற்று வரை சாதாரண பிராமண சிப்பாய். இன்றோ பிரதம சேனாபதி!

கொஞ்சநேரம் நிசப்தம் நிலவியது. நாகசிம்மன் சிலைபோல நின்றுகொண்டிருந்தான். ஸலீமின் கண்களில் ஒரு விதமான ஒளி வீசியது.

"உன்னை எதற்காக சேனாதிபதியாக்குகிறேன், தெரியுமா?" என்று நிசப்தத்தைக் கலைத்துக் கூறினான் ஜிஹாங்கிர்.

நாகசிம்மன் பதில் பேசவில்லை. ஏதோ ரகஸ்யமாகக் காதோடு காதாகச் சொன்னான்.

தலையை அசைத்து விட்டு அகன்றான்.

* * * *

"மாலதி!" என்று 'பெரிய' குரலில் அழைத்துக் கொண்டே நாகன் வீட்டிற்குள் நுழைந்தான். மாலதி, நாகசிம்மனின் இளராஜபுத்ர மனைவி. ஒரு காலத்தில் 'செயலாயிருந்த' குடும்பத்தின் வழித்தோன்றியவள். அவள் இருதயத்தில் எத்தனையோ ஆசைகள் குமுறிக்கொண்டிருந்தன வாழ்வில் உச்சத்தையடையத் துடித்துக் கொண்டிருந்தாள். நாகசிம்மன் 'ஜாம் ஜாமெ'ன நடந்து அவளிருக்குமிடம் சென்றான்.

"ஏது நடை பெரிய சேனாதிபதிபோலிருக்கே" என்று கேட்டுவிட்டு 'கலீ'ரென சிரித்தாள். நாகனின் முகத்தில் புன்னகை வழிந்தது.

"ஆமடி! நான் மட்டும், என்ன சோடையா? நானும் சேனாதிபதி தான்" என்று கர்வம் தொண்டையை அடைக்கக் கூறினான்.

"ஆமாம், சேனாதிபதியுமாச்சு, நீங்களுமாச்சு" என நீட்டி முழக்கிக்கொண்டு தன் வேலையைக் கவனிக்கலானாள் மாலதி.

நாகன் வெற்றிலைக் காம்பினைக் கிழித்து தூர எறிந்து விட்டு தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் மௌனம், பின் நாகசிம்மனே பேச ஆரம்பித்தான்.

"மாலதி, நிஜமா நாளையிலிருந்து" என்றான் கொஞ்சும் குரலில்.

"நாளையிலிருந்து?" என்று வெட்டும் தொனியில் பதில் வந்தது, அந்தக் குயில் மொழியாளிடமிருந்து.

"என் பிரியே, கோபமேன்? உண்மையாக நான் நாளை முதல் சேனைத்தலைவன்; புது அரசர் ஜிஹாங்கீரின் உத்திரவு."

மாலதியின் முகமண்டலம் என்றுமில்லாத ஒளியுடன் பிரகாசித்தது. தன் நெடுநாள் விருப்பம் நிறைவேறியது என்ற ஆனந்திலோ என்னவோ அவள் நிற்கமுடியாமல் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

நாகன் அவளைத்தாங்கினான்; பெரிய சுப செய்தியால் அவள் மெய்ம்மறந்து நின்றாள்.

ரொம்ப நேரம் கழிந்துவிட்டது. நாகசிம்மனின் மடியில் மாலதி படுத்துக்கொண்டிருந்தாள்.

"ஏது திடீரென்று இந்த உயர்ந்த பதவி" என்று மெதுவாகக் கேட்டாள்.

நாகன் முதலில் அதைப்பற்றிச் சொல்ல வெட்கப்பட்டான். எனினும் மனதைக்கட்டுப் படுத்திக்கொண்டான்.

"சும்மா என்னை உயர்த்திவிடவில்லை, சக்கிரவர்த்தி. என் உதவியை அவர் நாடுகிறார்."

"உங்கள் உதவியையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆம். கண்ணே! என் உதவியைத்தான் பெரிதும் விரும்புகிறார், ஜிஹாங்கீர்."

கதையை ஆரம்பித்தான்.

* * * *

ஸலீம் உல்லாசப் பிரியன்: கலைமோஹன். அழகு எங்கு பொதிந்து கிடந்தாலும் அதைப் பருக எண்ணுவான். அது அவனுடைய சுபாவம். ரொம்பத் தொலைவிலுள்ள பாரஸீக தேசத்திலிருந்து ஒரு ஏழை பிழைப்பை நாடி டில்லிவந்தான். அவன் தன்னுடன் கூட ஒரு 'கிளி'யைக் கூட்டிக்கொண்டு வந்தான். கிளி என்றால் கிளி தான். அப்படியிருந்தாள் அவன் குமாரி. என்ன அழகு! ஒரு வேளை இவள் தான் அழகுத் தெய்வமோ என வியக்கும்படியிருந்தாள்.

பாரசீகனுக்கு மொகலாய அரண்மனையில் வேலை. அவன் மகளும் அடிக்கடி அங்கு செல்வாள். ஸலீமின் சுழல்கின்ற கண்களில் எப்படியோ அப்பேதைப் பெண் சிக்கிவிட்டாள். இளவரசன் முதல் சந்திப்பில் திகைத்துப் போய் விட்டான். "யார் இந்தப் பெண்?" என்று கூட யோசிக்காமல் அவளை அடைய எண்ணினான். இந்த காதல் நாடகம் சிலநாள் நடந்து கடைசியில் அக்பரின் காதில் போய் விழுந்தது. அக்பர் பெரிய சக்ரவர்த்தி; உதார குணவான். என்ன இருந்தாலும் வலுப்பொருந்திய மொகல் சாம்ராஜ்யத்தின் இளவரசன் ஒரு பணிபபெண்ணை விவாஹம் செய்ய விடுவாரா? ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. இறுதியில் அந்தக் 'கிளி'யை வங்காளத்தில் சிற்றரசரான ஷேர்க்கானுக்குத் தானம செய்துவிட்டார் அக்பர்.

நூர்—அவள் தான்—ஷேர்க்கானின் மனைவியாகி சில வருடங்கள் மறைந்தன. ஆனால் ஸலீமின் மனதிலிருந்து மட்டும் அந்த சுந்தர உருவம் அகலவேயில்லை.

அக்பர் இறந்தார்; ஜிஹாங்கீர் அரசு பதம் ஏறினான். தன் மனசில் குத்திக்கொண்டிருக்கும முள்ளை எடுக்க விரும்பினான். "நூர், ஸலீமின் 'பைடக்கானா'வை அலங்கரிக்க அருகதையுடையவளே தவிர ஷேர்க்கானின் மனைவியாயிருக்கவேண்டியவளல்ல" என்ற எண்ணம் அவனிடம் உறைந்துபோயிருந்தது.

ஸலீமின் எண்ணங்களுக்கு இறக்கை முளைத்தது. ஏன் அவன் அரசனாகிவிட்டானல்லவா? நூரைத் தன் அரண்மனைக்கு அழைக்க ஏற்பாடு செய்தான். ஆனால் அவள் ஷேர்க்கானின் மனைவியல்லவா? அதைப்பற்றி கவலையில்லை! சாம்ராட்டின் ஆக்ஞையின் முன் ஷேர்க்கான் பணியவேண்டியது தான். அந்தோ! ஷேர்க்கான் அத்தனை பயங்கொள்ளியாக இல்லை! மனைவியை இழக்க அவன் தயாராயில்லை. எனவே பெரிய சேனை யொன்றை வங்காளத்துக்கனுப்ப ஸலீம் உத்தேசித்தான். போரில் வென்று நூரை அழைத்து வர, அந்தச் சேனைக்குத் தலைவன்தான் நாகஸிம்மன்!

கதையை முடித்தான்.

கதையைக் கேட்டுவிட்டு மாலதி பெருமுச்சுவிட்டாள். அவள் முகத்திலே வியர்வைத் துளிகள் முத்து முத்தாக நின்றன. கதையை ரொம்ப அழகாகவும், கம்பீரமாகவும்தான் நாகன் சொன்னான். ஆனால் அது அந்தப் பெண் இருதயத்தில் பெரிய சண்டமாருதத்தைக் கிளப்பி விட்டது.

அவள் மனக் குகையில் எத்தனையோ வித விதமான நினைவுகள் தோன்றி மறைந்தன.

அவள் நினைத்தாள்.

"நூர், ஷேர்க்கானின் மனைவி. அவனிடமிருந்து நூரைப் பிரிக்க நாகன் படை கொண்டு செல்கிறான். தேன் கூட்டிலிருந்து தேனைப் பிரிக்கச் செல்வது போல. தாம்பத்ய வாழ்க்கையில் சோகத்தை யுண்டுபண்ணுவது ...ஆ! எத்தனை பெரிய பாவம்... அதைச் செய்வது...அதைவிட.... இறக்கலாம்......சாவு, சாவு, சாவு!"

மாலதியின் அந்தராத்மாவில் இப்படித் தோன்றியது. அவளுடைய சந்தோஷமெல்லாம் பஞ்சாகப் பறந்தது. துர்ச்செயலுக்குச் சன்மானம் பதவி! அவள் நெஞ்சு 'பக்'கென்றது.

அன்றிரவு பூராவும் மாலதி கண் துயிலவில்லை. அழுது அழுது முகம் வீங்கிப் போயிருந்தது. நீலோற் பலம்போன்ற நயனங்கள் சிவந்துவிட்டன. நாகன் பொருளை யுணர்ந்தான், மகா வேதாந்திபோல.

விடிந்தது. கதிரவனின் மெல்லிய கிரணங்கள் மலர்கள் மீது ஒளி வீசின. நாக ஸிம்மனுக்கு எல்லாம் சூன்யமாகத் தெரிந்தது.

* * *

ஜிஹாங்கீர் உல்லாஸ மாளிகையில் வீற்றிருந்தான். பணிப்பெண்ணொருத்தி உக்காவின் குழலில் புகையிலையைத் திணித்துக்கொண்டிருந்தாள். எதிரே நாகசிம்மன்.

சக்ரவர்த்தி, "என்ன நாக சிம்மா ஆயத்தந்தானே" என்று மெதுவாகக் கேட்டார்.

மௌனம், நாகசிம்மன் முகத்தில் உணர்ச்சியில்லை. வெறும் கல்லாய்ச் சமைந்து நின்றான்.

"ஏன் பதில் பேசாமல் நிற்கிறாய்?" என்று மீண்டும் ஜிஹாங்கீர் கொஞ்சம் உரத்த குரலில் கேட்டான்.

மீண்டும் அதே மௌனம்.

ஸலீமிற்கு கோபம் வந்து விட்டது.

'ஏனிந்தப் பயங்கர மௌனம் வாயைத் திறந்து சொல்லேன்." என்று உறுமினான். அவன் கண்களில் ஆசையும், ஏமாற்றமும் தாண்டவமாடின.

"இல்லை; நான் அங்குபோக விரும்பவில்லை" என்று நடுக்கத்துடன் நாகசிம்மன் கூறினான்.

"என்ன என் ஆணையைமீற உனக்குத் தைரியமா?" என்று குதித்தான், தலை கால் தெரியாமல் பாவம், மையல் அவனை என்ன பாடு படுத்துகிறது!"

"உங்கள் ஆணையைத் தட்ட மாட்டேன் தான். ஆனால் அதற்குமேல் ஒரு ஆக்ஞை..."

"அதென்ன?" என இடைமறித்தான். "அது...ஆம்...என் அந்தராத்மாவின் ஆக்ஞை" என்றான் நாகன் சிறிது கம்பீரத்துடனேயே. அவன் முகத்தில் அமைதியின் சின்னம் தோன்றியது; கண்களில் சாந்தி குடிகொண்டது.

ஜிஹாங்கீர் அப்படியே சாய்ந்து விட்டான். பைத்தியக்காரனைப்போல் தனக்குள்ளே, "அந்தராத்மா!......அந்தராத்மா!...அந்தராத்மா! ...என முனகிக்கொண்டான். அந்த வார்த்தை ஒளிகள் மொகல் அரண்மனையின் பெரிய சுவர்களில் மோதி எதிரொலி செய்தன!

இந்தியாவின் புதிய ஆயுதம்

மேற்படி மகுடத்துடன் லண்டன் "ஈவனிங் ஸ்டாண்டாட்" பத்திரிகையில் கார்ட்டூன் படம் வரையப்பட்டிருக்கிறது.

நிலைமை தெளியவேண்டும்; நிதானம் நிலைக்கவேண்டும்; பொறுப்பு பெரும்பாலும் கவர்ன்மெண்டுடையது. இந்தியா கவர்ன்மெண்டிலே பெரும்பாலோர் இந்தியர் என்று பெருமையாகச் சொல்லப்படுகிறது. ஆம்! இந்தியர் தான்; ஆனால், மக்களின் ஆதரவால் பதவி ஏற்றவர் அல்ல; கவர்ன்மெண்டின் தயவால் பதவி ஏறியவர். அவர்களிடம் அதிகம் எதிர்பார்ப்பதற்கில்லை; என்றாலும் சிலராவது பதவியின் பொறுப்பை அறிவர். பழைய வாசனை பூராவும் விட்டிராது; பூர்வாசிரமத்தில் மக்களுடன் நெருங்கிப் பழகியிருக்கின்றனர். என்ன செய்யப் போகிறார்கள்? பதவி இன்றைக்கு அவர்கள் வகிக்கலாம். யார் செய்த கிளர்ச்சியால் பதவி ஏற்பட்டதென்பதை மறப்பதற்கில்லை.

—இம்மாதம் 12-ம் தேதி எழுதப்பட்டது.

* * * * *

பிரிட்டிஷ் தொழிற் கட்சி யோசனை சொல்லக் கிளம்பியிருக்கிறது. கனவுலகில் அது சஞ்சரிப்பதாகவே தோன்றுகிறது. சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்துமாறு அக் கட்சி காங்கிரஸுக்கு வேண்டுகோள் விடுக்கிறது. வெகு ஆச்சரியமான கோரிக்கை! காங்கிரஸ் அவ்வியக்கத்தை ஆரம்பிக்கவுமில்லை; கேட்கக்கூடிய நிலைமையிலுமின்றில்லை. அவசியமானால் அதைத் துவக்க, காந்திஜிக்கு அதிகாரம் அளித்ததைத் தவிர ,காங்கிரஸ் வேறொன்றும் செய்யவில்லை. இந்தியர் கைக்கு உண்மையில் அதிகாரம் மாற்றப்படவில்லையானால்தான், காந்திஜி அவ் வதிகாரத்தைக் கையாள இடமிருந்தது. எப்படியாவது அதைக் கையாண்டே தீர்வதென அவர் துடித்துக்கொண்டிருக்கவில்லை. அதற்கு மாறாக, அதைத் தவிர்க்க, வைஸ்ராயுடன் கலந்து பேசவும் அவர் தயாராயிருந்தார். ஆனால், ஸர்க்கார் பேசவே இடம் தரவில்லை. சரேலென்று பாய்ந்து காங்கிரஸ் பிரமுகர்களையெல்லாம் சிறையிலடைத்து விட்டனர். காங்கிரஸ் இன்று சட்ட விரோதமான ஸ்தாபனம். பழியையும் சுமத்தி, கழிக்கவும் வழியில்லாமல் செய்துவிட்டனர். யார் பொறுப்பாளி?

சிறை சென்ற தலைவர்களைப்பற்றி இதுவரை ஒரு தகவலுமில்லை. ஜெயில் கட்டுப்பாடு இறுகிவிட்டது. அவர்களைக் குறித்து வெளி யுலகுக்கு ஒன்றும் தெரியாது. வெளியே என்ன நடக்கிறதென அவர்களும் அறியார். இங்நிலையில் சிக்கலைத் தீர்க்க வழி காணும் வசதி அவர்களுக்கிருப்பது போன்ற தோரணையில் பேசுவது வீண்பேச்சு. ஸர்க்காரே முன்வந்து இத்துறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொறுப்பைத் தட்டிக்கழிப்பது நெருக்கடியைத் தீர்க்கும் வழியல்ல. அதிகாரத்தை உண்மையில் இந்தியரிடம் மாற்றாத திட்டங்கள் பலவற்றை வெளியிட்டு, இதுவரை போதியவளவு பதம் பார்த்தாகிவிட்டது. அவை பலிக்காமல் போனதுடன், விபரீதமும் விளையக் கண்டிருக்கிறோம். எனவே தற்போதைய சிக்கல் தீர, ஸர்க்கார் வெளியிடும் யோசனை சித்தசுத்தி வாய்ந்ததாயிருக்க வேண்டும். அது உண்மையில் அதிகாரத்தை இந்தியரிடம் விட்டுக்கொடுப்பதாயிருக்கவேண்டும். இத்தகைய யோசனை யொன்றைச் சிறையிலுள்ள தலைவர்கள் சுதந்திரத்துடன் ஆலோசிக்க வழிபிறக்குமாயின், அவர்கள் அதைத் திரஸ்கரித்து விடுவரென நாம் நினைக்கவில்லை. நாட்டில் தோன்றியுள்ள கொந்தளிப்பு அடங்க வழி அதுதான்; அடக்கு முறையல்ல.

கொந்தளிப்புக்கு ஜவாப்தாரி காங்கிரஸே என்று சிலர் சீறுகின்றனர். இதுவும் நியாயமற்ற பேச்சு. கண்ட விடங்களில் கலகம் செய்யுமாறு காங்கிரஸ் பிரகடனம் செய்ததா? அமளியும், அட்டூழியமும் புரியுமாறு தன்னைச் சார்ந்தவர்களைக் காங்கிரஸ் ஏவியதா? வீண் பழி சுமத்தி, தன் மூளையையும், பிறர் புத்தியையும் கலக்குவதில் பிரயோஜனமில்லை. எந்த நாட்டிலும், எந்த சமூகத்திலும், கட்டுக்கடங்காத ஒரு கூட்டம் உண்டு. கொந்தளிப்பு ஏற்படும் சமயத்தில் தான் இவர்களுக்குக் கொண்டாட்டம்! இவர்களது முறையற்ற செயல்களால் எல்லாத்



எல்லைப்புற காந்தி

எல்லைபபுற காந்தி கான் அப்துல் கபார் கான் தமது மாகாண வாசிகள் முன் புதிய இயக்கத்தைப்பற்றிப் பிரசங்கம் புரிகிறார்.

இந்திர விழா

★

வா. வேணுகோபாலன்

சோழநாட்டின் பழம் பெரும் தலைநகர் புகார்ப்பட்டினம். 'பூம்புகார்' எனப் புலவர் புகழும் பெருமையை உடையது அது. அந்நகரில் சம்பாபதி என்னும் தெய்வம் வாழ்ந்தமையால் அதற்குச் சம்பாபதி என்றும் பெயர் உண்டாயிற்று. ககந்தன் என்னும் அரசன் காததமையால் காகந்தி எனும்பெயர் பெற்றது. காவிரியாறு கீழ்த்திசை வழியே ஒழுகி. கடலோடு, கலக்கின்றமையால் காவிரிப்பூம் பட்டினம் எனச் சிறப்புற்றது. கடலொலி இடையுறுது கேட்கும் கவினுடையது. கடல் வழி மரக்கலம் ஓட்டும் தமிழர்க்குத் தலை சிறந்த துறைமுகம். அயல் நாட்டினர் கடல் வழி வந்து தமிழ் நாட்டில் வாணிபம் செய்வதற்குப் பிரதான துறைமுகம். தமிழ் வேந்தர் மூவருள்ளும் சோழரது பெருமைக்கு இலக்காய்.'சோழர் தம் குலக்கொடி.' எனப் புகழப் பெற்ற காவிரியாற்றின் பெருமையால் அந்நகருக்குக் காவிரிப் பூம் பட்டினம் என்ற பெயரே நிலைபெற்றது. தமிழ் நாட்டின் பெருமைக்கும், சிறப்பாக சோழ நாட்டின் புகழுக்கும் அறிகுறியாக விளங்குவது. பலவகை மதத்தினரும் சிறப்பாக, ஜைன மதத்தினரும், பௌத்தமதத்தினரும் தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகளைத் தமிழ்நாட்டில் பரவச்செய்வதற்கு உரிய இடமாக எண்ணி அந்நகரில் வாழ்ந்தனர்.

எண்ணற்ற வீதிகள்

காவிரிப்பூம்பட்டினத்தின் அகநகர், மருவூர்ப்பாக்கமென்றும், புறநகர் பட்டினப் பாக்கம் என்றும் புகழப் பெறும். மருவூர்பாக்கத்தில் சித்திரமாடங்கள், வாயில் மாடங்கள், மாளிகைகள், கோபுரங்கள், வாயில் காவலராகிய யவனர் வாழும் வீதிகள்; பல்வேறு நாட்டிலிருந்து வந்த வணிகர்கள் வாழும் வீதிகள்; வர்ணம், சந்தனம், வாசனைப் பொடி, பூ, புகையிலிடும் வாசனைப் பொருள்கள், சீப்பு, கண்ணுடி முதலிய பொருள்கள் விற்போர் வீதிகள் பட்டினுலும், மயிரினுலும், நூலினுலும் ஆடை நெய்யும் காருகர் வீதி; பவளம், பொன், முத்து, மணி முதலிய அருங்கலம் விற்கும் வீதிகள்; பலவேறு அரிய பொருள்கள் விற்கும் கூல வீதி; அப்பவாணிகர், பிட்டுவாணிகர், கள்விற்கும் வலைச்சியர், மீன் விலைப்பகருய பரதவர், உப்புவிற்பவர், இலையமுதிடுபவர் முதலியோர் வாழும் வீதிகள்; பஞ்சவாஸம் விற்பவர், ஊன் விற்பவர். தானியங்கள் விற்போர் செம்பு கொட்டிகன், வெண்கலக் கன்னுர், தச்சர், இரும்பு வினை செய்வோர், சிற்பாசாரிகள். சித்திரக்காரர், பறம்பு செய்வோர், மாலை தொடுப்போர், தையற்காரர், வேய்ங்குழல் வீணை மத்தளம் முதலிய பயிலும் பெரும்பாணர் வாழும் வீதகள் முதலியன விளங்கும்.

பட்டினப் பக்கத்தில் அரசர் வீதி. அந்தணர் வீதி, வணிகர் வீதி, உழவர் வீதி முதலியன ஒரு புறம் விளங்கும். மந்திரியர் சேனுதிபதிகள் முதலியோர் வாழும் வீதி. ஒருபுறம் விளங்கும். கொடித்தேர் வீதியும், பீடிகைத் தெருவும் ஒரு புறம் விளங்கும், ஆயுள்வேதர், காலக்கணிதர் பல்வகைக் கலையினர் வாழும் வீதிகள் ஒருபுறம், மணிகள் செய்வோர் சங்கறுப்போர் முதலியோர் வாழும் வீதிகள் ஒருபுறம். சூதர், மாகதர், வேதணிகர், நாட்டியம் பயிற்றுவோர் நாழிகைக் கணக்கர், நாட்டிய மங்கையர், நாடக கணிகையர். பொது மகளிர் முதலியோர் வாழும் வீதிகள் ஒருபுறம். பூக்கள் விற்போர், வாத்தியம் செய்வோர். ஏவல் மகளிர், காஞ்சுகியர் முதலியோர் வாழும் வீதிகள் ஒருபுறம், யானை, குதிரை, ஒட்டகம் முதலிய நிற்கும் கொட்டில்கள் ஒருபுறம்.

கோயில்கள்

தேர்ப்பாகர், யானைப்பாகர், குதிரை பயிற்றுவோர், தறுகண் வீரர் முதலியோர் வாழும் வீதிகள் ஒருபுறம். மன்றம், பொதியில், சதுக்கம், இளமரச்சோலை, செய் குன்றுகள், பொய்கைகள் முதலியன அங்கங்கே விளங்கும். இந்திரன், திருமால், சிவபெருமான், திருமகள், கலைமகள் முதலிய தெய்வங்களின் கோயில்கள் ஒருபுறம். இந்திரனுல் புத்த தேவனுக்கு நிருமிக்கப்பட்ட இந்திர விகாரமும், ஜினலயமும் ஒரு புறம் விளங்கும். அருகர் பள்ளிகளும், பௌத்தர் பள்ளிகளும் ஒருபுறம் விளங்கும். நகரின் ஒரு புறத்தில் காவிரியாற்றின் கரையில் உவவனம் என்ற அழகு மிக்க சோலை விளங்கும். அதில் சோம குண்டம், சூரிய குண்டம் என்ற பொய்கைகளும் பலவகை மன்றங்களும், புத்த தேவனது பாத பீடிகையும், சம்பாபதியின் கோயிலும் கற்பகக் கோயிலும் விளங்கும். நக

குண்டலகேசி கதையைப்பற்றிய குறிப்பு

★

குண்டலகேசி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்ருகக் கூறப் பெறும் நூல். தமிழகத்தின் தவக் குறைவால் இறந்து போன நூல்களுள் இதுவும் ஒன்று. பௌத்த மதத்தைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும் நூல்களில் இக் காவியம் தலை சிறந்தது என்பர். பௌத்த மதச் சார்புடைய ஒரு சரித்திரத்தைத் தான், இக் 'குண்டலகேசி' கூறுகிறது. பௌத்த மதத்தைப் பற்றிய, அரிய கருத்துக்களும், கோள்கைகளும் இதனுள் நிரம்பியிருந்தன என்பர். குண்டலகேசியைச் சார்ந்ததென்று கூறப் பெறும் சில பாடல்களைக்கொண்டே, இதன் பெருமையை அறிந்து கொள்ள இயலும். மிகச் சில பாடல்களே இப்போது கிடைக்கின்றன. ஜைனமதத்தைப்பற்றிக் கூறும் 'நீலகேசி' என்னும் நூலின் உரையில் குண்டலகேசியின் செய்யுட்கள் பலவற்றின் முதற் குறிப்பு மட்டும் எடுத்துக் காட்டப் பெறுகின்றன நீலகேசிக்கு உரைவகுத்த சமயதிவாகர வாமன முனிவர் என்பார், அந் நூலின் உரையில், பௌத்த மதக் கோள்கைகளை மறுத்துக் கூறும் வாயிலாக, குண்டலகேசியைப்பற்றிப் பலவிடங்களில் எழுதியுள்ளார். குண்டலகேசியின் சரித்திர சம்பந்தமான குறிப்பு ஒன்றையும் ஓரிடத்தில் அவர் எழுதியுள்ளார். தவிர, 'புறத்திரட்டு' என்னும் தோகை நூலிலும் குண்டலகேசியைச் சார்ந்த சில பாடல்கள் காணப்படுகின்றன. குண்டலகேசியைப்பற்றி அந்நூலின், முகவுரையில், தேரிகாதை என்னும் நூலில் கண்ட குறிப்புக்களும் எழுதப் பெற்றிருக்கின்றன. 'வீர சோழியம்' என்னும் இலக்கண நூலிலும் 'குண்டலகேசி'ப் பாடல்கள் சில எடுத்துக் காட்டப் பெறுகின்றன. எனினும், கிடைக்கின்ற பாடல்களிலிருந்து, குண்டலகேசியின் சரித்திரக் குறிப்புக்களை அறிவதற்கு இல்லை. கிடைக்கும் குறிப்புக்களும் சிதறியிருப்பனவே. அவை யாவற்றையும் ஒருங்கே தோகுத்து, அவற்றைத்தழுவி, ஆங்காங்கே கதைக்குவேண்டிய அளவு புது மெருகு கொடுத்து, 'குண்டலகேசி' என்னும் தலைப்பெயரிட்டே எழுதப்பெறுவது இக்கதை. இக்காவியம் இறந்தமையால், குண்டலகேசியின் கதையை முற்றிலும் அறிவதற்குத் தக்க ஆதாரங்கள் இல்லை. ஆதலின், கதையின் முழுவடிவம் புலப்பட, கிடைக்கும் குறிப்புக்களைத் தழுவிப் புனையப் பெற்றதே இக்கதை.

ரின் எல்லைக்கு அப்பால், பல்வகைத் தெய்வங்கள் வாழ்வதும் சுடுகாட்டை உடையதுமாகிய சக்கர வாளக்கோட்டம் விளங்கும். கடலின் துறைமுகத்தில் நூற்றுக்கணக்கான மரக்கலங்களும், தோணிகளும் சோழ வேந்தனது புலிக் கொடியுடன் விளங்கும். சாவகர், சீனர், யவனர், துருக்கர் முதலிய அயல் நாட்டினரது மரக்கலங்கள் பண்டப் பொதியுடன் போவதும் வருவதுமாய் விளங்கும்.

பௌத்த மதப் பிரசாரம்.

அந்நகரின் நடுவே நடு நாயகமாய், நாற் படையின் காவலுடன் விளங்குவது சோழவேந்தனது அரண்மனை. பௌத்தர், ஜைனர். காபாலிகர். வைசேடிகர், சாங்கியர், ஆஜீவகர் வைதிகர் முதலிய பலவகை மதத்தினரும் அந்நகரில் வாழ்ந்தனர். பலவகைச் சமயங்களிலும் ஜைன சமயமும் பௌத்த சமயமுமே பெரும்பாலோரால் கைக்கொள்ளப்பட்டன. சிறப்பாகப் பௌத்த சமயமே பிரபலம் அடைந்திருந்தது. அதனுல் பௌத்த சந்நியாசிகளும், பௌத்த பிக்ஷுணிகளும் அந்நகரில் நன்கு மதிக்கப் பெற்று நிறைந்திருந்தனர். சோழவேந்தனுகிய துணையிளங்கிள்ளியும் பௌத்த மதத்தைப் பின்பற்றினுன். காஞ்சி முதலிய நகரங்களில் பௌத்த விகாரங்களைக் கட்டிச் சிறப்பித்தான். பௌத்த மதத்தைத்தமிழ்நாட்டில் பிரபலமுறச் செய்வதற்குச் சோழ வேந்தனே முக்கிய காரணமாக விளங்கினுன். நாடு முழுவதும் பௌத்த மதத்தைப் பரவச் செய்ய எண்ணிய பௌத்த சந்நியாசிகள், நாட்டின் தலைவனை சோழவேந்தனையே பௌத்த மதத்தினனுக ஆக்கி, அவனைக் கொண்டு அம்மதத்தைப் பரவச் செய்தனர். 'மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி' என்பதற்கு ஏற்ப தமிழ் மக்களில் பெரும்பாலூர் பௌத்தராயினர். காவிரிப்பூம்பட்டினத்திலும், தமிழகத்தில் உள்ள பல நகரங்களிலும், பௌத்தப் பள்ளிகளும், புத்த விகாரங்களும் கட்டப்பெற்றன. அவ்வாறே ஜைன மதமும் பிரபலமுற்றிருந்தது. பௌத்த மதப் பெரியோர்கள் புதிது புதிதாகத் தோன்றினர்.. பௌத்த மதப் பிரசாரமும் மிகுதியாயிற்று. சோழவேந்தனுக்குத் தலை நகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், பௌத்த மதப் பிரசாரகர்களுக்கும் தலை நகராக விளங்கியது.

* * * *

இந்திர விழா

அந்நகரைப் பரம்பரையாக ஆண்டு வந்த சோழவேந்தர்களுள் தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் என்னும் சோழவேந்தன் காலம் முதல் ஒவ்வொரு சோழ அரசர்களாலும் வருஷந்தோறும் இருபத்தெட்டு நாட்கள் தொடர்ச்சியாக இந்திரனுக்குத் திருவிழாச் செய்வது மரபு. நகர், வளப்பம் அடைவதன் நிமித்தம் இந்திர விழாவை விடாமல் வருஷந்தோறும் செய்து வந்தனர். அம் மரபைப் பின்பற்றிச் சோழவேந்தன் துணையிளங்கிள்ளியும அவ் வருஷம் இந்திர விழாவை நிகழ்த்த எண்ணினுன்.

முறைப்படி இந்திர விழாவைச் சிறப்புற நடத்த எண்ணினுன் சோழவேந்தன். அதைப பற்றி எல்லோருடனும் ஆலோசிக்க எண்ணி சமயவாதிகள் பலரையும். வணிகர்கள், பிரபுக்கள், பெரியோர்கள் எண்பேராயத்தினர், ஐம்பெருங்குழுவினர் முதலியோரையும் அழைத்துவரச் செய்தான். அரசன் கட்டளைப்படி யாவரும் ஆலோசனை மண்டபத்தில் வந்து அமர்ந்தனர் புலி உருவம் பொறித்த அரசு கட்டிலில் சோழவேந்தன் வீற்றிருந்தான். மந்திரியர், புரோகிதர் ஏனுதிகள் முதலியோர் அருகில் இருந்து அரசன் ஏவும் காரியங்களைச் செய்துகொண்டிருந்தனர். ஆலோசனைக்கு வருதற்குரிய அறிஞர்கள் யாவரும வந்துவிட்டனர். அதன் பின் சோழவேந்தன் தன் கருத்தை வெளியிடலானுன்.

வேந்தனின் கருத்து

"அறிஞர்களே, நகர் வளமுறும் பொருட்டு நம் முன்னோர்களால் வருஷந்தோறும் இந்திரனுக்குத் திருவிழாச் செய்யப்பட்டுவருகிறது. தொன்றுதொட்டு அவர்களால் செய்யப்பெற்றுவந்த இந்திரவிழாவை இவ் வருஷம் நாமும் செய்ய வேண்டும். வ்விதம் செய்யாமல் தவறினுல் நாடுவளம் குன்றி அழிவடையும என்றும் இந்நகரைக் காவல் செய்யும் நாளங்காடிப் பூதமும், சதுக்கப் பூதமும் நம்மைத் துன்புறுத்தி இந்நகரை விட்டு நீங்கும் என்றும் நம்முன்னோர் கூறியுள்ளனர். ஆதலால் இந்திர விழாவை இருபத்தெட்டு நாட்களும் சிறப்புறச் செய்யவேண்டும், அறிஞர்கள் யாவரும் இந்திர விழாக் காலத்தில் முறைப்படி செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டுகிறேன். பெரியோர்கள் யாவரும் இவ் விழாவில் உவகையுடன் கலந்து ஊக்கமுடன் காரியங்களைச் செய்து சிறப்பிக்க வேண்டும். எல்லோருடைய நிரம்பிய உடன்பாட்டின்படி இவ்விழாச் செய்தியை நகர மக்களுக்கும் அறியச் செய்வேன்."

சோழவேந்தனுடைய வேண்டுகோளை யாவரும் கேட்டனர். அரசன் கருத்தும் தம் கருத்தும் ஒரு தன்மையாக இருந்தமை கண்டு உள்ளம் உவந்தனர். இந்திரவிழாச் செய்வதில் தமக்குள்ள உடன்பாட்டையும், அதனுல் தம் உள்ளத்தில் மிக்கெழுந்த உவகையையும் அரசன் உணரும்படி எழுந்து ஆரவாரம் செய்தனர். "சோழவேந்தன் வாழ்க, இந்நகர் வாழ்க, இந்திரன் 'வாழ்க" என்று வாழ்த்தினர். அரசன் அதைக்கேட்டு மகிழ்ந்து எழுந்து கைகுவித்து எல்லோரையும் அமரும்படிக் குறிப்பித்தான். யாவரும தத்தம் இருக்கையில் அமர்ந்தனர். அங்கு அமர்ந்திருந்த எல்லோருக்கும் தக்கபடி சிறப்புக்கள் செய்து விடைகொடுத்தான். யாவரும் உவகையுடன் மீண்டு சென்றனர்.



"மன்னர் மன்னவ, இப்போது நல்ல முகூர்த்தவேளை. இந்திர விழா நடக்கப்போதலை நகரத்தார்க்கு இப்போதே உணர்த்துவது நல்லது" எனறுன் சோதிடன்.

மன்னனின் ஆக்ஞை

சோதிடன் மொழியையே நற்சகுனமாக அரசன் எண்ணினுன். உடனே இந்திரனை மனத்தால் நினைத்து, 'நாடு மென்மேலும் வளமுறவேண்டும்" என்று வேண்டி வணங்கினுன், பின்னர் மந்திரியரை அழைத்து இந்திர விழா நடக்கப் போதலை நகரத்தார்க்கு அறியச் செய்யுமாறு பணித்தான். மந்திரியர் விரைந்து சென்று முரசறைவானிடம் அரசன் கட்டளையை விளங்கக் கூறினர். அப்போது நாழிகை அறிவிப்போன் வந்து, "வேந்தே அடிசில் அருந்தும் காலம் ஆணுகி விட்டது" என்று கூறிச்சென்ருன். மந்திரியா, புரோகிதர், சோதிடர், ஏனுதிகள் முதலியவர்க்குச் சொல்லுவனவற்றை மொழிந்தபின் அரசன் உணவு அருந்தச் சொன்ருன். மந்திரியர் முதலியோர் அரசன் ஏவிய காரியங்களைச் செய்வதற்குத் தத்தம் இடங்களை அடைந்தனர்.

சோழ வேந்தனுடைய வெற்றி முரசம் இருக்கும் வச்சிரக் கோட்டத்தை அடைந்தான் முரசறைபவன். அடைந்தவுடன் அங்குள்ள முரசத்தை வணங்கி எடுத்து அலங்காரம் செய்த யானையின் மீது ஏற்றினுன். முரசத்தை முன்னர் வைத்துத் தானும் ஏறிக்கொண்டு யானையைச் செலுத்தி முரசைக் குறுந்தடியால் கொட்டி அரசன் கட்டளையைக் கூறலானுன்,

வேந்தின் வேண்டுகோள்

"காவிரி வளமுடன் இந்நகர் வாழ்க. சோழவேந்தன் வாழ்க. சோழ நாடு பகை, பிணி. மூப்பின்றிப் பொலிக. புலிக்கொடி வாழ்க. மழை பொழிக. செங்கோல் சிறக்க. இன்று முதல் இருபத்தெட்டு நாட்கள் இந்திர விழா நடக்கப்பெறும். இவ் விழாக் காலங்களில் தேவர் யாவரும் இந் நகரில் வந்து தங்குவர் என்பது பெரியோர் கொள்கை. ஆதலால் எல்லா இடங்களையும் அலங்காரம் செய்யுங்கள். வீதிதோறும் பூரண கும்பங்கள், பொற் பாலிகைகள் பாவை விளக்குகள் முதலியன வைத்திடுங்கள். வாழை கமுகு, மாதப் பூங்கொடி முதலியன கட்டுங்கள். வீதியிடமெல்லாம் பழமணல் மாற்றிப் புது மணல் பரப்புங்கள். கூடங்களிலும், மாடங்களிலும், கோபுரங்களிலும் கொடிகளை. நிலை நாட்டுங்கள். ஆண், பெண் என்ற இருபாலாரும் பட்டாடை அணிந்து பாலன்னம் உண்டு களிப்படையுங்கள். முக்கண்ணன் முதல் சதுக்கத் தெய்வம் இறுதியாக உள்ள எல்லாத் தெய்வங்களும் சிறப்புச் செய்யுங்கள் ஆடவரும் மகளிரும் அகமகிழ்ச்சியுடன் நற்காரியங்களைச் செய்யுங்கள். நல்ல நீதிகளைக் கேளுங்கள். நல்வார்த்தைகளைப் பேசுங்கள். நல்ல நினைவுடன் இருங்கள். பழைய பகைகளை விட்டு நட்புடன் கூடிக் குலாவுங்கள். அறிஞர்கள் அறவுரைகளைக் கூறுவாராக. சமய வாதிகள் சமயவாதம் செய்க. மாலையில் கடற் காட்சிகளையும், சோலைக் காட்சிகளையும், வீதிக் காட்சிகளையும் கண்டு களியுங்கள். பொது இடங்களில் யாவரும் கூடி மகிழ்க. இசைவாணர்கள் இசைப்பயிற்சி செய்வாராக. நாட்டியம் வல்லோர் அரங்கில் நடித்துக் களியூட்டுவாராக, அரசனுடைய மெய் காப்பாளர் அல்லாதார் காரணமின்றி ஆயுதம் கைக்கொள்ளாதீர்கள். பசியும் பிணியும் பகையும் நீங்குக மழையும் செல்வமும் சுரந்திடுக; இவை சோழ வேந்தனுடைய வேண்டுகோள்."

முரசறைபவன், இவ்வாறு வீதி தோறும் சென்று நகரிடமெல்லாம் அரசன் கட்டளையை முரசறைந்து மொழிந்தான்.

விழா ஆரம்பம்

இந்திர விழா தொடங்கப்பெற்றது. நகரெங்கும அலங்கரித்தனர். நகரின் அகத்தும் புறத்தும் விசாலமான பந்தர்களை அமைத்தனர். தத்தம்வாயில்கள் தோறும் தோரணங்கள் கட்டி விசித்திரமாகிய அலங்காரங்கள் செய்தனர். சோதிடன் கூறிய நன் முகூர்த்தத்தில் அரண்மனையிலிருந்து அரசன் புறப்பட்டான். அவனுடன் மங்கலப்பொருள்களை ஏந்திக் கொண்டு ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தா

(14-ம் பக்கம் பார்க்க)

"களிப்பும், கவலையும்"

சிறு கதை

★

ஸ்ரீ பி. எஸ். எஸ்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. எத்தனையோ ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்று. மூன்று நாள் மங்கிக் கிடந்த சூரியன் அன்று ஒரு புது சோபையோடு காட்சியளித்தான். இந்த மூன்று நாளும் மழை என்று பிரமாதமாக ஒன்றும் பெய்ய வில்லை. ஏதோ பிசு பிசு வென்று இடைவிடாமல் தூறிக்கொண்டே இருந்தது.

"மழைக்கு முன் ஆபீசுக்குப் போய்ச்சேர்ந்து விட்டால் போதும்." என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். உங்கள் கையில் குடை கிடையாது; அதனால் தான் இந்த எண்ணம். குடை இருந்தால் மட்டும் என்ன? அது வேறு விஷயம்.

அவசர அவசரமாக ஸ்நானம், போஜனம் எல்லாவற்றையும் முடித்து விட்டு, கோட்டை மாட்டிக்கொண்டு கண்ணுடியிருக்கும் இடத்தைக் கூடத்திரும்பிப் பார்க்காமல், நீங்கள் பஸ் நிற்குமிடத்தை நோக்கி விரைந்து செல்லுகிறீர்கள். என்ன விபரீதம்! எங்கிருந்தோ வந்து விடுகிறது இந்த மழை... உங்கள் கோட்டு, வேஷ்டி எல்லாம் ஒரே ஈரம். பின்பு அந்த பஸ்ஸில் ஏறினலோ அதை ஏன் கேட்கிறீர்கள் படும் அவஸ்தையை!

அந்த மூன்று நாளும் இப்படித் தான் மழை பெய்தது. கடமையை உத்தேசித்து ஆபீசுக்குப்போய் வந்தேன். வீட்டை விட்டு பஸ் ஏறினல் ஆபீஸ்; அங்கிருந்து புறப்பட்டால் மறுபடி வீடு எல்லாம் ஈரக் கோலத்தில்.

மேலே சொன்ன ஞாயிற்றுக்கிழமை யன்று வானம் வெளுத்தது. கண்ணுக்குச் சிறு குருவிகள் "கீச் கீச்"என்று கூச்சலிட்டுக்கொண்டு வான வெளியில் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன. சிறு பிள்ளைகள், திடீரென்று மழைவிடவே என்ன செய்வதென்று தெரியாமல், கூட்டம் கூட்டமாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சில வாலிபர்கள், இருபது இருபத்தைந்து வயதுள்ளவர்கள், கையில் "கிரிக்கட் பாட்",களுடனும் கிரிக்கட் விளையாட்டிற்கு வேண்டிய இதர கருவிகளுடனும் விளையாட்டைப்பற்றிய நினைப்பிலேயே அதிகம் பேசாமல், தெருவழியாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

எனக்கும் வீட்டிலிருக்கப் பிடிக்க வில்லை. அதுவும், திருவல்லிக்கேணியில், அந்த அரை வீட்டில்.

என் பெண் பெயர் கமலா. அவளுக்கு வயது இப்பொழுது ஆறு. விளையாட்டிற்கு ஆள் கிடைக்காமல் என் கையைக் காலைப் பிடித்திழுக்க ஆரம்பித்தாள். கமலா கொஞ்சம் பயந்தவள். நாலு குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடத் தைரியம் கிடையாது. அதனால் நான் தான் அவளுடைய விளையாட்டு பொம்மை; சிநேகிதன்; எல்லாம். அவளை அழைத்துக் கொண்டு சென்னை பூராவும் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வருவதென்று தீர்மானித்தேன். அவளுக்கு ஊரிலுள்ள அழகான இடங்களையெல்லாம் காட்ட வேண்டும். பெரிய பெரிய கட்டடங்கள், கடைகள், பங்களாக்கள், சினிமாத் தியேட்டர்கள், ரெயில்வே ஸ்டேஷன்கள் அடையார், மயிலாப்பூர், மாம்பலம் இவற்றையெல்லாம் கமலா பார்த்ததேயில்லை,

நாங்களிரண்டு பேரும் கிளம்பினோம், காலை வெயில். ஒவ்வொரு இடமாகப் போனோம். வழி நெடுகே அவள் கேள்விகள் தான்.

"இதென்னப்பா கோவில் மாதிரி? என்னப்பா இது? அவனப்பாரு, எவ்வளவு பெரிசா இருக்கான்!" என்ருள்.

"இது கோவிலில்லெ; கோவில் மாதிரி பண்ணிருக்கா. இது சினிமா நடக்கும் இடம் உங்கம்மாகூட அடிக்கடி சினிமா பார்க்கணும், பார்த்தாத் தான்னு அடிச்சுக்கரு பாரு, இங்கே அதத்தான் காட்டறு" என்று பதில் சொன்னேன்.

"இங்கு என்ன ஸினிமா அப்பா? எனக்கு அது சொல்லு" என்ருள்.

அட கஷ்டகாலமே! இவளுக்கு ஸினிமாக் கதை சொல்ல உட்கார்ந்து விட்டால்......போதும், பொழுது விடிந்து விடும்!

"ஆத்துக்கு வந்ததும் சொல்றேன். இப்ப, இதோ பாரு...... இதுதான் பேப்பர் ஆபீஸ். நம்மாத்துக்கு பேப்பர் வல்லெ? அதெல்லாம் இங்கேருந்துதான் வரது." என்று பேச்சை வேறு வழியில் திருப்பினேன்.

அவள் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டுதானிருந்தாள். சில என்னையும் திணற அடிக்கும்படியான கேள்விகளாகவும் இருந்தன. ஒரு ஜவுளிக்கடைக்குள் போனேன், அவளுக்கு ஒரு 'ஜாக்கட்' வாங்குவதற்காக.

கடைக்காரன் ஒரு 'ஸில்க்' ஜாக்கட்டை எடுத்துக் காட்டினன். எனக்கு அது ரொம்பவும் பிடித்திருந்தது. "அப்பா இது தான் எனக்கு வேண்டும்" என்று குதித்துக்கொண்டே கமலாவும் அதைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டாள் அதன் விலையை விசாரித்தேன். பத்து ரூபாயென்ருன்!

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "கமலா உனக்கு இதெல்லாம் வேண்டாம்" என்றேன்.

"என்னத்துனலே அப்பா? அது தான் வேணும்!. என்ருள்.

அதற்கு நான் என்ன பதில் சொல்லுவது? "இந்த ஸில்கு வாங்க என்னிடம் பணமில்லை" என்று உண்மையைச் சொன்னல் அவளுக்கு அர்த்தமாகப் போகிறதா? "ஒங்கிட்ட ஏது பணமில்லை. அதோ அவாளெல்லாம் ஸில்கு ஸில்கா வாங்கல்லியா" என்று கேட்டு விட்டால்?

இதைப் போன்ற இன்னும் பல சிறிய கேள்விகள். அவைகளையெல்லாம் சமாளித்துக் கொண்டு நான் மாம்பலம் வந்து விட்டேன்.

அப்பொழுது மாலை நேரம்.

திருவல்லிக்கேணியின் நெருங்கி ஒடுங்கிய தெரு வீடுகளுக்கெதிராக, இங்கே விசாலமான தோட்டங்கள்; தனித்தனி வீடுகள், அழகான பங்களாக்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு முற்றம் ஒரு தோட்டம். இப்படியே நாலாபுறத்திலும் கண்ணுக்கெட்டாத தூரம்வரை ஒரே பங்களாக்கள், வீடுகள்.

இதையெல்லாம் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கலந்த உள்ளப் பூரிப்புடன் பார்த்துக்கொண்டே வந்தேன். கொஞ்ச தூரத்தில் ஒரு பங்களா, என்னைக் கூவியழைப்பதுபோல் அவ்வளவு கம்பீரமாகத் தோற்றியது. நான் அதை அணுகினேன். அந்த பங்களாவைச் சுற்றிக் கண்ணுக்கு அழகான தோட்டம்.

நான் அங்கேயே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் திருஷ்டியை அங்கே விட்டு எடுக்கவேயில்லை. அதில் வசிப்பவர்கள் எவ்வளவு அழகாக இருப்பார்கள்! அதைப்பற்றிய ஆராய்ச்சியில் என் மனம் ஈடுபட்டிருந்தது. அதற்கு ஏற்ருப்போல் உள்ளேயிருந்து சிறிதுகூட ஓசைசெய்யாமல் ஒரு கார் வெளியே வந்து, ஒரு நிமிஷம் வாசலண்டை நின்றுவிட்டு ஓடிச்சென்றது. அது அவர்கள் வீட்டுகார்தான். அதிலிருந்த பெண் அந்த வீட்டுப்பெண் தான். நான் எண்ணினதுபோல் அந்த பங்களாவில் வசிக்கவேண்டிய பெண்தான் அவள்!

கமலா இதையெல்லாம் கவனித்தவள்போல் காணப்படவில்லை. அவள் பார்வை குறிப்பாக ஏதோ ஒரு இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அங்கே, அவள் பார்வை செல்லுமிடத்தில், அந்த பங்களாவுக்கருகே புறந்த பூமியில், பச்சைப் பசேலென்று படர்ந்து கிடந்த புல், காட்டுச்செடிகள் இவைகளுக்கு நடுவில் ஒரு குடிசை இருந்தது. மண்ணுலானது.

அதன் முற்றத்தில் ஒரு நாய் ஆகாயத்தை நோக்கிக்கொண்டு படுத்துக்கிடந்தது. அது அவர்கள் சொத்து. உள்ளேயிருந்து பதினறு, பதினேழு வயதுள்ள பெண் ஒருத்தி வெளியே வந்து ஆகாயத்தை நோக்கி விட்டு, கைக்குக் கிடைத்த ஏதோ இரண்டு சுள்ளிகளை வாரிப் பொறுக்கிக் கொண்டு, மறுபடி உள்ளே சென்ருள். அவளும் ஏன் அப்படி ஆகாயத்தைப் பார்க்க வேண்டும்? கடவுள் அங்கே தானிருக்கிருர் என்று சொல்லுகிருர்களே, அதை நம்பியா? இப்படி நான் சிந்திக்கையில் கமலா குறுக்கிட்டாள். மறுபடியும் அவள் சந்தேகக் கேள்விகள்தான்.

"அப்பா, இவாளெல்லாம் மழைலெ என்ன பண்ணுவா?"

"இவாளெ எல்லாம் மழை ஒன்றும் செய்யாது, கமலா. நம்மாத்துக்கு கனகம் வரல்லியோ நித்தியம் அம்மாவுக்குப் பாத்திரம் தேய்க்க, அவளும் இது மாதிரி ஒரு குடிசைலெ தானிருக்கா. மழையெல்லாம் குடிசையை ஒண்ணும் பண்ணுது." என்றேன்.

என் பதில் கேட்டு அவள் மனம் ஆறுதலடைந்து விட்டது. அப்பா எவ்வளவு புத்திசாலி என்ற அகமகிழ்ச்சி வேறு அவளுக்கு ஏற்பட்டிருக்கும்.

மாலைப் பொழுது முடிந்து உலகம் மறுபடியும் இருளில் மறைந்தது. நானும் கமலாவும் வீடு திரும்பினோம்.

ஆனல் வீட்டை அடைந்ததும் சொல்லி வைத்தாற் போல் வானம் திடீரென்று இருண்டு கொண்டது, கறுத்து, இருண்ட மேகக் கூட்டங்கள், அலைகள் போல் உக்கிரமான ஒரு இரைச்சலுடன் புரண்டோடி, ஒன்றோடொன்று மோதி ஒரு பெரும் மழையாகக் கொட்டியது. இடிச் சப்தத்துக்குப் பயந்து கமலா என்னை வந்து கட்டிக் கொண்டாள்.

அதற்குப் பின் அவ்வளவு பலத்த இடியுமில்லை; மின்னலுமில்லை. கமலா தூங்கி விட்டாள்.

இரவு முழுவதும் ஓயாமல் மழை கொட்டியது. அந்த மழையில் தன்னை மறந்து தூங்கி விடுகிறுன் மனிதன். நானும் எத்தனையோ நாட்கள் அதன் சுகத்தை அனுபவித்திருக்கிறேன்.

ஆனல் அன்று எனக்குத் தூக்கமே வரவில்லை. எவ்வளவோ சிரமப்பட்டுப் பார்த்தேன்; ஒன்றும் பலிக்கவில்லை.

அந்தக் குடிசை, கமலா காட்டின குடிசை, இந்தக் காற்றிலும், மழையிலும், இடிந்து கரைந்து கீழே விழுந்திருக்க வேண்டுமே? அவர்கள் என்ன செய்வார்கள்? அந்த ஒரே நினைவு தான் அன்றிரவு முழுவதும். தங்குவதற்கு இடமில்லாமல், கொட்டும் மழையில் நனைந்து, உயிரைக் காப்பாற்ற ஓடி அலையும் அந்த ஏழைப் பெண்ணின் தோற்றம் என் கண்முன் ஒரு சலனப் படத்தில் தோன்றுவதுபோலத் தோன்றி மறையும். கொஞ்ச நேரம் கழித்து அவள் ஒரு பங்களாவுக்குள் நுழையும் காட்சி. உடம்பு விறைக்க, மேலே போட்டுக்கொண்டிருந்த அழுக்குக் கந்தல் துணியொன்றை வெளிச்ச மறைவாக நின்று கொண்டு, ஈரத்தைப்போக்க தன் கை பலத்தை முழுவதும் உபயோகித்து கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிருள். அவளை பங்களா உள்ளிருந்து ஒருவன் பார்த்து விடுகிருன். "யாரங்கே, திருட்டுக் கழுதை...போடீ"

(12-ம் பக்கம் பார்க்க)

பாரதி-புதுவைநிகழ்ச்சிகள்

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

★

கவி யரசர் ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியார் பெண்களுக்கு அளிக்க வேண்டிய மரியாதை குறித்துத் தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிருர். "பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!" என்ற அடியை முதலாகக் கொண்டு ஓர் பாட்டையும் இசைத்திருக்கிருர். அவர் பாடிய சந்தர்ப்பத்தை விளக்கி ஸ்ரீமதி தங்கம்மாள் இக் கட்டுரையை வரைந்திருக்கிருர்.

ஓர் நாள் புதுவையில் ஹரி கதை ஒன்றுக்குப் போனேம். போனவுடன் கதைக்கு ஏற்பாடு பண்ணியிருந்த வீட்டுக்காரர் என் தந்தையை அழைத்துச் சென்று சபை நடுவே பாகவதர் எதிரில்கொண்டு உட்காரவைத்தார். உடனே பாகவதர் ஒரு பாட்டு ஆரம்பித்தார் "உம் ஸம்சாரத்தை எனக்குத் தாரும்" என்று. தந்தை திடுக்கிட்டார். "என்னடா பாட்டு இது?" அடுத்த வார்த்தை என்ன சொல்லப் போகிருர் என்று பார்த்தால் சங்கதி மேல் சங்கதி போட்டு பதினைந்து நிமிஷமாக்கினுர் பாகவதர். "என் சம்பத்தை உமக்குத் தருவேன்" "உம் சம்சாரத்தை எனக்குத் தாரும்." என்ற பின்பு தான் கபீர்தாஸ் சரித்திரம் என்பது விளங்கிற்று. பாகவதர் கதையை அழகாகக் கூறிக் கொண்டு போனுர். "அப்பொழுது அந்தச் செட்டியார் கபீர்தாஸின் மனைவியைப் பள்ளி அறையில் சந்தித்ததும், பகவான் கிருஷ்ண பரமாத்மா அவ்வூர் கொத்தவால் வேஷத்தோடு அந்தச் செட்டியை அடித்துப் பயமுறுத்தியதும் தன் வீட்டுக்கு வந்த மனைவி சுந்தராவைக் கண்டதும் கபீர் கோபமுற்று "என் வாழ்க்கையைப் பங்கம் செய்து செட்டியை ஏமாற்றி வந்தாயே!" என்று கடிந்து செட்டி வீட்டில் கொண்டு விடவும், அவன் அவளைக் கண்டதும் பாம்பைக் கண்டது போல் பயந்து ஓடவும், கபீர் கோப மடங்காமல் அவ்வூர்க் கொத்தவாலை வாய்க்கு வந்தபடி ஏசவும், இவ்வளவுக்கு மேல் பகவான் பிரத்யக்ஷமாய் உண்மையைக் கூறி எல்லோரையும் சமாதானப் படுத்தி யனுப்பினுர்" என்று முடித்தார். பின்பு தந்தை பாகவதரிடம் விளையாட்டாக "ஸ்வாமின்! எல்லாம் சரி தான். நான் வந்து உட்கார்ந்ததும், உட்காராததுமாக "உம் ஸம்சாரத்தை' எனக்குத் தாரும்!" என்று ஓயாமல் கூறிக்கொண்டிருந்தீரே! இனிமேல் எங்கு பாடினுலும் சரி. என்ன சங்கதி போடுவதானுலும் சரி; அடுத்த வாக்கியத்தைக் கூறிவிட்டு சங்கதிகளைப்போடும் என்ருர். அருகிலிருந்தவர் 'கொல்' என்று சிரித்தனர். வீட்டுக்குப் போகும் வழியில்

தந்தை:—

"ஞானத்திலே—
பரமோனத்திலே உயர்
மானத்திலே யன்ன
தானத்திலே—
கானத்திலே யமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு.
(பாருக்குள்ளே நல்ல நாடு
எங்கள் பாரத நாடு;)
உடல் வன்மையிலே
நன்மையிலே,
செல்வம் 'பன்மையிலே
மறத்தன்மையிலே—
பொன் மயிலொத்திடும்
மாதர் தம் கற்பின்
புகழினிலே யுயர் நாடு
(இந்தப் பாருக்குள்ளே
நல்ல நாடு எங்கள்
பாரத நாடு)

என்று பாடிக்கொண்டு வந்தார்.

ஒரு சிறிய தப்புச் செய்தாலும் அப்பாவின் கண்ணில் அது எவ்விதமோ பட்டு விடும். நான் ஒரு நாள் எழுதிக்கொண்டிருந்தேன். யாரோ என்னைக் கூவி அழைத்த சப்தம் கேட்டது. அப்படியே மைப் புட்டியில் பேனவை சொருகி வைத்து விட்டு அவசரமாகச் சென்றேன். தந்தையாருக்கு அந்த சமயம் மௌனவிரதம் அதனல் நான் வெகுநேரம் கழிந்தபின் திரும்ப வந்து பார்க்கும்போது அந்தக் கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தார்:—"முறையற்ற காரியம் செய்யாதே! மூடா; மூடா, மூடா!"

"புன்னகை" என்பது சுகமான சிரிப்பு—எதிலுமே கணக்கின்றி, மித்மிஞ்சினுல் திகட்டிவிடும். இன்பம், துன்பம் எல்லாம் அப்படித்தான். அதைப்போலவே நகைப்பிலும் கோபச்சிரிப்பு, ஏளனச் சிரிப்பு உற்சாகச் சிரிப்பு துக்கச்சிரிப்பு பேய்ச்சிரிப்பு முதலியனவுண்டு. அவ்வளவிலும் மோகனப் புன்னகை தான் தனக்கும் மற்றவருக்கும் இன்பம் அளிக்கின்றது. எங்கள் தோழிகளில் ஒருத்திக்கு புன்னகை புரிவது சுபாவம். ஆனல் அவள் வீட்டார் அவ்வளை அதற்காக எப்போதும் கடு கடு வென்று கோபிப்பார்கள் "எப்போதும் என்ன சிரிப்பு! இது கெட்ட வழக்கம். என்பார்கள். அவள் எவ்வளவு முயன்றும் அவளால் முகத்தை 'உம்'மென்று, நகைப்பின்றி வைத்துக் கொள்ளச் சாத்யப்படவில்லை. இது அவள் வீட்டார் சந்தேகப் பட்டதைப் போலவே சங்கடத்திற்காளாக்கியது. வாலிபர்கள் ஒவ்வொரு வரும், அவள் தங்களைத்தான் பார்த்து நகைக்கின்ருள் என்று எண்ணவாரம்பித்தனர். இதைத் தந்தையாரின் கூர்மையான கண்கள் கவனித்தன. பின்பு எல்லாரும் கூடி உட்கார்ந்திருக்கும் சமயம் பின் வருமாறு தந்தை பிரஸங்கம் புரிந்து வாலிபர்களுக்கு நற்புத்தி புகட்டினுர்:— "அன்பான இளைஞர்களே! காதல் என்பது ஏதோ சாதாரணமான விஷயம் என்று நினைக்க வேண்டாம். அது தெய்வீகமானது. எல்லோருக்கும் காதல் புரிவதும், அங்ஙனம் காதல் புரிந்த கன்னியரை மணம் புரிந்துகொள்வதும் சாத்தியமில்லை. ஏனெனில் நம் நாட்டில் இத்தனைவித சாதிகளும், இத்தனைக் கட்டுபாடுகளும், எத்தனையோ தினுசு வழக்கங்களும் ஸம்பிரதாயங்களும் நிறைந்திருக்கும் போது "காதல் மணம் தான் வேண்டும்" என்ருல் நடக்காது. ஏதோ ஒரு விதமாக மணஞ்செய்துகொண்டபின் ஒவ்வொரு இளைஞனும் தனக்கு வாய்ந்த மனைவியின் பால் பரிபூர்ணமான பிரேமை செலுத்தி வந்தானுனல் தானகவே மனைவிக்கு அவனிடம் அன்பு ஏற்பட்டு தாம்பத்ய வாழ்க்கை இனிது நடைபெறும். அதைவிட்டு, எந்த கன்னிகையானுலும், கண்ணுக்குப் பார்க்க நன்ருயிருந்தால்—அல்லது அவள் ஸரமான ஸ்வபாவத்தினுல்-புன்னகையோடு இருந்தால் அவள் நம்மிடம் காதல் கொண்டு, அதனுல் தான் நகை முகத்தோடிருக்கிருள் என்று தப்பிதமான உணர்ச்சியோடு அவளிடம் நடந்து கொள்கிருர்கள்.

அது சரியல்ல. ஒவ்வொருவனும் நம் நாட்டில் ஸ்திரீகளுக்கு மரியாதை செலுத்த வேண்டும். ஆங்கிலேயர் ஸ்திரீகளுக்குத்தான் முதல் மரியாதை அளிக்கிருர்கள். வேண்டாத விஷயங்களுக்கெல்லாம் ஆங்கிலேயரைப் பின்பற்றி அவர்கள் வழக்கங்களைக் கைக்கொள்ளும் நமது தேசத்தவர்கள் இதைச் சிறிதும் கவனியாமல் கேவலம் பெண்களை மிருகங்களாகவே மதித்து, அவர்களை கௌரவக் குறைவாக நடத்துகிருர்கள். இதுவரை சென்ற பிழைகளுக்காக வருந்திக்கொண்டிருப்பதில் பயனில்லை. இனிமேல் ஒவ்வோரிளைஞனும் ஸ்திரீகளுக்கு மனப்பூர்வமாக மரியாதையளித்து, கூடுமான வரை தங்கள் வீட்டுப் பெண்களுக்கு, சுயமரியாதையாக விருப்பதற்குச் சுதந்திரம் கொடுக்கவேண்டும். இதனுல் நாடு நலம் பெறும்.

"வலிமை சேர்ப்பது
தாய் முலைப்பாலடா
மானம் சேர்க்கும்
மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது
பெண்களறமடா
கைகள் கோத்துக்
களித்து நின்றுடுவோம்.

பெண்மை வாழ்கென்று
கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று
கூத்திடுவோமடா
தண்மை யின்ப நற்
புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும்
ஸதியென்ற நாமமும்.

என்று பாடியதும் அங்கு நின்ற யாவரும் "அவ்விதமாகவே செய்வோம்" என்று தந்தையை வணங்கினர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகள்

[காப்பிரைட்]

I

பல்லவி

தல்லி ! நின்னு நெர நம்மினனு வினவே

அனுபல்லவி

எல்லலோக முல காதாரமை யுன்னநா

சரணம்

1. ஆதி சக்தி நீவு பராகு ஸேயகன்
ஆதரின் த்ஸூடகிதே மஞ்சி ஸமயமு
காதா? ஸரோஜ பவாச்யுத சம்பு நுத
பாத நீது தாஸானு தாஸுட

2. தேவி ! நீது ஸரிஸமான மெவரனி
தேவ ராஜு முனுலு நின்னு பொகடக
நாவெத தீர்ச்சி பிரான வரா லொஸகி
நன்னு ப்ரோவ நீ ஜால மேல? நெ

3. ச்யாம கிருஷ்ண பரிபாலினி ஜனனீ
காமிதார்த்த ப்ரத கஞ்சலோசனீ
கௌமாரி ராணி புராணி பராசக்தி
காமகோடி பீடாதி வாஸினி.

II

எல்லலோகமுலகு—எல்லாலோகங்களுக்கும்
ஆதாரமையுன்ன நாதல்லி—ஆதாரமாயிருக்கும் என்தாயே.
நின்னுநெரநம்மினனுவினவே—உன்னை நம்பினேன் கேள்.
ஆதிசக்தி! நீவு பராகுஸேயகன்—சக்திகளுக்கெல்லாம் மூலமே நீ அலட்சியம் செய்யாமல்
ஆதரின்த்ஸூடகு இதே மஞ்சிஸமயமுகாதா—காப்பாற்ற இதுவே நல்ல ஸமயமல்லவா!
ஸரோஜபவ, அச்யுத, சம்புநுதபாத—ப்ரம்மா விஷ்ணு, மஹேச்வரன் என்றவர்களால் துதிக்கப்பட்ட திருவடிகளையுடையவளே
நீது தாஸானு தாஸுடே—உன் தாஸானு தாஸனே (நான்)
(2) தேவி! நீது ஸரிஸமானமு எவரு அனி—தேவி! உனக்கு ஸரி ஸமானம் எவர் என்று
தேவராஜு, முனுலு நின்னு பொகடக—தேவராஜன் மஹரிஷிகள் முதலியவர்கள் உன்னைத் துதிக்க
நாவெத தீர்ச்சி—என் துக்கத்தைப் போக்கி
பிரானவராலு ஒஸகி—சீக்கிரமாக வரங்களைக் கொடுத்து
நன்னுப்ரோவன ஈ ஜாலமு ஏல?—என்னைக்காப்பாற்ற இந்த ஜாலம் ஏன்? (நாதல்லி)
(3) ச்யாமகிருஷ்ண பரிபாலினி–ச்யாம கிருஷ்ணனை ரக்ஷிப்பவளே ஜனனி—தாயே
காமித அர்த்தப்ரதகஞ்சலோசனி—அடியார்கள் விரும்புவதைக் கொடுக்கும் தாமரைக் கண்ணையுடையவளே!
கௌமாரி! ராணீ! புராணீ! பராசக்தி—குமரனைப் பெற்றவளே! பரமசிவனுடைய பட்டமஹிஷியே! யாவற்றிற்கும் முதன்மையானவளே! பராசக்தி!
காமகோடி பீடாதி வாஸினி—காமகோடி பீடத்தில் வீற்றிருப்பவளே! (என் தாயே)

III

ஆதாரமை:—'சிவ: சக்தியாயுக்த;' என்ற சங்கர பகவத் பாதாளுடைய ஸூக்தியும்.

கீதாசார்யருடைய வாக்யமும் இதற்கு ப்ரமாணம்.

ஆதி சக்தி:—'பரப்ரஹ்மம் ஸகல புருஷ ரூபமான தெய்வங்களுக்கு எப்படி உற்பத்திஸ்தானமோ அப்படி பராசக்தியும் ஸ்த்ரீ ரூபமான தெய்வங்களுக்கு உற்பத்தி ஸ்தானமே. அதையே மூல ப்ரக்ருதி யென்றும் சொல்வதுண்டு. அதனுடைய ரூபங்களே துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி யெனப்படும்.

ஸ்வரப்படுத்தி சரிபார்த்துக் கொடுத்த ஸங்கீத ரத்னகா அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ அய்யங்கார்.

மஞ்சிஸமயமு:—இதைவிட அதிக கஷ்டங்கள் எனக்கு நேராது. ஆகையால் என்னைக் காக்க இதுவே தருணம். ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகளின் 'இதி ஸமயமுரா' என்ற கீர்த்தனமும், தரங்கம்பாடி பஞ்சநதய்யர் செய்த 'பிரான ப்ரோவ இதி மஞ்சி ஸமயமு' என்ற கீர்த்தனமும் இதே கருத்துள்ளது.

ஸரோஜ பவ-நுத:—திரிமூர்த்திகளின் பார்வைகளுக்கு உற்பத்தி ஸ்தானமானதால் அவர்கள் துதிப்பது நியாயமே. தேவீ ஸஹஸ்ர நாமத்தில் பராசக்தியின் அருளால் திரிமூர்த்திகள் தங்களுடைய ஸ்தானங்களை அடைந்தார்கள் என்றும், அவளுடைய விரல்களின் நகங்களிலிருந்து விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் உண்டாயின வென்றும் சொல்லப்படுகிறது.

தாஸானு தாஸன்:—பராசக்தியின் உபாஸகர்களுக்குள் முதன்மை வாய்ந்தவர் துர்வாஸஸ் மஹரிஷி. அவருடைய பாததூளியைப் போற்றுகிறவர்கள் தேவீ உபாஸகர்கள் யாவரும் ஆவார். த்யாகராஜ ஸ்வாமிகளும் இந்த ப்ரயோகத்தை 'நீ தாஸானு தாஸுட,' 'ப்ருந்தாவன லோல' என்ற கீர்த்தனத்தில் 'ராம தாஸ தாஸ' என்றும், (தான் பகவத் பக்தியைக் காட்டிலும் பாகவத பக்தியே மேலான தென்று கொள்கையுடையவர் என்றும்), 'எந்த ரோமஹானு பாவுலு' என்ற கீர்த்தனையிலும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

லக்ஷ்மணன் பகவத் கைங்கர்ய தர்மத்தையும், பரதன் பகவத் உபாஸனையையும், சத்ருக்னன் பாகவத உபாஸனையையும் தங்கள் சக்திப்படி நடத்திக் காட்ட வந்தவர்கள். ஸ்வாமிகளும் பாகவத உபாஸன தர்மத்தை அனுஷ்டிக்க வந்தவரே. தொண்டரடிப் பொடி யென்று பெயர் பூண்ட ஸ்ரீ விப்ர நாராயண மஹானுபாவரும் இந்த வகுப்பைச் சேர்ந்தவரே. 'குல தைவம் மமதஸ்ய பாத ரேணு' யென்ற கிருஷ்ண பரமாத்மாவும் இந்த வகுப்பினரே. 'த்வத் ப்ருத்ய ப்ருத்ய பரிசாரக ப்ருத்ய ப்ருத்யஸ்ய ப்ருத்ய இதி மாம்ஸ்மரலோகநாத' யென்றும் ஸ்ரீ பராசர பட்டர் அருளிச்செய்தாரிரே. 'குலந்தாங்கு' என்ற பாசுரத்தையும் நமக்கு அனுக்ரஹித்த இந்த ஆழ்வாரின் மனோபாவமும் இதே. 'சங்கநிதி பதுமநிதி' யென்ற திருப்பதிகத்திலும் திருவரங்க கலம்பகத்தில் பிள்ளைப்பெருமான் ஐயங்கார், 'பாதியாயமுகிய' வென்ற திருமொழியிலும் இதே கருத்தை விளக்கியிருக்கின்றனர்.

ஸரிஸமான:—பகவானுடைய அனந்த கல்யாண குணங்கள் யாவும் பிராட்டியிடத்தில் அழகுவாய்ந்து விளங்குகின்றன. 'சிவே' யென்ற நாமத்திற்கும் இதே காரணம். 'ஒப்பாருமிக்காருமில்லாதானே' யென்ற பாசுரமும், 'நதத்ஸம: சாப்யதிகோபித்ருச்யதே' என்ற ச்ருதியும் தேவியையும் குறித்துச் சொல்வதன்றோ.

முனுலு:—துர்வாஸஸ் முதலியவர்களும் 'சண்டீசப்தசதீ' ஆதிசங்கர பகவத்பாதாளுடைய?

ஜாலமேல:—கல்கடா ராகத்தில் 'பார்வதி நினு நெரநம்மிதி;' என்ற கீர்த்தனத்தில் 'ஜாலமேல காமாக்ஷி' என்றப்ரயோகங்களைப் பார்க்கவும்.

ச்யாமகிருஷ்ண:—இந்ததேவீ பரமபக்தருக்கு ச்யாமகிருஷ்ணரென்ற பெயர் உரியது. ஆனால் வழக்கத்தில் தவறாக ச்யாமா சாஸ்திரிகளென்ற பெயர் பரவியிருக்கிறது. இதற்கு வியாக்யானம் செய்யும் ஒருவர் 'தேவி உபாஸகாரனதால் தேவியின் பெயர்களில்

ஒன்றான 'ச்யாமா' வென்பதே பொருந்துமென்றார். அப்படியானால் 'ச்யாம கிருஷ்ண' சாஸ்திரிகளென்பது இன்னும் விசேஷமாகப் பொருந்துமல்லவா? கிருஷ்ணசாஸ்திரிகள் என்றதை ஒட்டி ராமசாஸ்திரிகள் என்று வரவேண்டியிருக்கத் தவறாக ராமா சாஸ்திரிகள் என்று சொல்லுகிறோமல்லவா?. ஆனால் ச்யாமா வென்றது தேவியின் நாமங்களில் ஒன்றென்று ஒப்புக் கொள்வோம். ஆனால் ராமா வென்ற பதம் ஸ்திரீ என்ற கருத்தையுடையது. ராமா சாஸ்திரிகள் என்ற இடத்தில் அது எப்படிப் பொருந்தும் ச்யாமா சாஸ்திரிகளைப் போல் ராமா சாஸ்திரிகள் (லக்ஷ்மீ உபாஸகர்) என்பது அவ்வளவு தவறல்ல. இதைக் குறித்தே ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் பூர்ண சந்த்ரிகா ராகத்தில் செய்த 'தெலிஸி ராம' என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் 'ராமாயனி சபலாக்ஷுல பேரு' (ராமா என்று ஸ்திரீகளுக்குப் பெயர்) (ராமாயினி ப்ரம்ம முலகு பெரு) (ராமன் என்று ப்ரஹ்மத்திற்குப் பெயர்) ஆனால் முதலாவது பதம் காமக்ரோதம் முதலிய நமது ஆறு சத்ருக்களின் சைன்யத்தைக் குறிக்கும். இரண்டாவது (ராம) பதம் மனித ஜன்மத்தால் உண்டாகும் மனோவாக்குக் காயங்களின் துக்கத்தைத் தீர்க்கும் என்றார்.

கஞ்சலோசனி:—'கஞ்ச தளாயதாக்ஷி' என்ற பிரயோகத்தை மனோஹரி ராகத்தில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் கிருதியைப் பார்க்க.

ராணி:—தேவியின் பேதங்களில் புவனேச்வரி. திரிபுரஸுந்தரி, ராஜராஜேச்வரி, ராஜச்யாமளா, முதலியவை ராணி என்ற பதத்தை விளக்கும்.

குறிப்பு:—இக் கிருதியும், சென்ற 17-தேதி வெளியான க்ருதியும் காலஞ்சென்ற கீர்த்தனாச்சார்ய ஸ்ரீமான் ஸ்ரீ, ஆர். ஸ்ரீனிவாஸய்யங்காரால் சரிபார்க்கப்பட்டவை.

IV

ராகம் — கல்யாணி   தாளம் — மிச்ர சாபு

(ராகலக்ஷணம்:—இது 65-வது மேளராகமாகும். சதுச்ருதிரிஷப, அந்தரகாந்தார, ப்ரதி மத்யம, சதுச்ருதி தைவத-காகலீ நிஷாதங்கள் இந்த ராகத்தின் ஸ்வர ஸ்தானங்கள். ஸர்வ ஸ்வர கமக ரக்திராகம். ஸாயங்கால வேளையில் பாடப்படவேண்டிய ராகமாகும்.)

பல்லவி

1. ; ரி, ஸா	ரீ ரீ க கா	; பா ப பம	ம க க ரி ரி ம கு
தல் வி	நி ன் னு நெ ரா	நம் . மி .	ஞு . னு . வி ன .
2. க ரி ரி ஸ ஸ ஸா	ஷி	ஷி	ம க ம த ம க ரி
வே . தல் . .	ஷி	ஷி	ஞு . னு . வீ ன .
3. ஷி	ஷி	; ஸ் நி த ப ம	கா ம த ம . க . ரி
ஷி	ஷி	நம் . . மி .	ஞு னு . வி ன .
4. ஷி	ஷி	; க ம ப த நீ த பபம	ஷி
ஷி	ஷி	நம் . . . . . மி . . .	ஷி
5. ஷி	ஷி	பா ; ; ;	; ; ; ;
ஷி	ஷி	நம்	

அனுபல்லவி

; ஸ்ா நி ஸ்ா	; நி த நி ஸ்ா	; ஸ்ா நி த ப	ம ப தா நி ஸ்ா
எல் லலோ	க - மூ ல	எல் ல லோ .	. . க மு ல
; ஸ்ா ரி க் ரி ஸ்	ஸ்ா நி த நி ஸ்ா	; ஸ் நி த ப ம	ம கு க ரி ரி ப ம
எல் ல . லோ .	. க . மு ல	கா . . தா .	ர . மா . யுன் ன .
க ரி			
நா .			(தல்லி)

சரணம்

; கா ம பா	பா பா ப மா	பா தா ப தா	ப ம ப ம க ம ரி
ஆ தி சக்	தி நீ . வு	ப ரா . கு	ஸே . . . ய க .
க ம பா ம பா	பா பா ப மா	ப த நிஸ் . நி த ப	ஷி
. . ஆ தி சக்	தி நீ . வு	ப . ரா . . கு	ஷி
; கா ம பா	; ப ம த ப ம	கா ம ப ப மா	தா கா ரி ஸா
ஆ த ரின்	த் ஸூ . ட கி .	தி மஞ் . சி	ஸ ம ய மு
; ஸா ரீ ஸ	ரீ . கா க கா	; பா ம பா	; தா நி ஸ்ா
கா தா ஸ	ரோ ஜ ப வா	ச் யு த சம்	பு நு த
; த ரீ ஸ்ா,	ஸ் நி நி த பா,	ம ப த நி ஸ்ா நி	த ப ப ம க ரி ரி
பா . த	நீ . . . து	தா . . . ஸா .	னு . தா . ஸூ . .
க ரி			
டை			(தல்லி)

* மிச்ரசாபு தாளம் ஸம்பிரதாயத்தில், முதலில் திஸ்ரம் பின்பு சதுஸ்ரம் கணக்கு செய்வது வழக்கம். ஆனால் இந்த கீர்த்தனத்தின் அமைப்பில் ஷி மிச்ரசாபு தாளம் முதலில் சதுஸ்ரமும் பின்பு திஸ்ரமும் கொண்டிருக்கிறது.

களிப்பும் கவலையும்

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று பல குரல்கள் ஏக காலத்தில் கர்ஜிக்கின்றன. அவள் அங்கிருந்து வெருண்டு ஓடிவிடுகிறாள். அவள் எங்கே போகிறாள்? அது எனக்குத்தெரியாது. மழையும் நின்றது.

பொழுதும் விடிந்தது. தொழிலாளர்கள், தொழிலாளப்பெண்கள் ஆகியோர் கும்பல் கும்பலாகப் பாதி ஓட்டமும் பாதி நடையுமாக வேலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். நானும் கிளம்பினேன் மாம்பலத்திற்கு.

அங்கே பங்களாவுக்கருகில் அந்தக் குடிசை வீடு நான் நினைத்ததுபோல் கீழே விழுந்து தரைமட்டமாகக் கிடந்தது. மனித வாடையே அங்கே காணவில்லை. அந்தப் பெண், அந்த நாய்-நான் பார்த்தவை அனைத்தும் எங்கே? அந்த பங்களாவிலிருப்பவர்களைப் போய் விசாரித்தால் தெரியும். எப்படிப் போவது?

இருந்தாலும் போனேன். ஏதோ அர்த்தமற்ற ஒரு நம்பிக்கை; மனிதவர்க்கத்தின் மீது அதன் தூண்டுதலின் வேகத்தில் உண்மை உலகை என் கண்கள் பார்க்க மறுத்தன. நான் அப்பொழுது கண்டது வேறு உலகம்.

நான், பங்களாவிற்குள் போனேன். ஒருவரையும் காணவில்லை.

"யாரங்கே?" என்றது ஒரு குரல் அதட்டிய தோரணையில். நான் என்னவோ பதிலுக்குச் சொன்னேன்; அப்பொழுது தோன்றியதை அவ்வளவுதான். அந்த பங்களாவை விட்டு வெளியே வந்தேன், தோட்டத்தைச் சுற்றிவரும் ஆள் நடைப்பாதை வழியாக கைக்கெட்டும் தூரத்தில், பல வர்ணங்களில் பலவகைப் பூக்கள் அந்தச் செடிகள் ஒவ்வொன்றும் இளங்காற்றில் நடனமாடியது. அதெல்லாம் அப்பொழுது எனக்கு அழகாகத் தோன்றவில்லை. ஒரே வெறுப்பு.

"அவர்கள் எங்காவது பிழைத்துக்கிடப்பார்கள் என்று மட்டும் தோன்றியது.

எந்த உழைப்பைக் கொண்டு பங்களா எழுப்பியதோ அந்த உழைப்பாளிக்கு ஒண்டவும் இடமில்லை. சுண்ணும்பும் கல்லுமாக வியர்வை சொட்ட அக்கட்டிடத்தைக் கட்ட உதவிய பெண்ணுக்கு மழையில் சற்று ஒதுங்கக் கூட வசதியில்லை. என்ன பரிதாபகரமான நிலை! கமலா "மழைலெ இவாளெல்லாம் என்னப்பா பண்ணுவா?" என்று கேட்டது எனக்கு நினைவு வந்தது. கவலையில்லாமல் அவள் கேட்ட கேள்வி உண்மையில் என்னைக் கவலையில் ஆழ்த்தியது. இவையெல்லாம் எத்தனை நாளைக்கு? என்று சிந்தித்தவண்ணமே வீடு திரும்பினேன். குடும்பத்துக்கு அன்றும் செய்ய வேண்டிய காரியங்கள் என் மனக் கவலையை ஓரளவு மாற்றினர்.

திட்டமான வாழ்க்கை

(வ. ரா. எழுதியது)

முதல் நாள், அரை மன தோடு திரும்பிப்போன நண்பர், மறுபடியும் வந்தார். அவருடைய முகத்தில், வருத்தமும் ஆத்திரமும் திகிலும் குடி கொண்டிருந்தன. 'என்ன வ. ரா.! நேற்றைக்கு ஒரே போடாகப் போட்டு விட்டீர்களே! நீங்கள் சொல்லுவதிலிருந்து, நம்மவர்களின் வாழ்க்கை பயங்கரமான நிலைமைக்கு வந்து விட்டதாக அல்லவா தோன்றுகிறது' என்றார்.

"நான் சொல்லித்தான் இது தெரிய வேண்டுமா? நம்மவர்களின் பரிதாபகரமான நிலைமையை அலசிப் பார்த்தால், உமக்கும் அது விளங்கியிருக்கும். நம்மவர்கள், எந்த விவகாரத்திலும் எஜமானர்கள் அல்ல. அவர்களுடைய குண விசேஷங்களை யாரும் மதிப்பதில்லை. ஒரு நாடு முழுதும் வசிக்கும் ஜனங்களை கூலிப் பட்டாளமாக, அந்நியர்கள் கருதி, அந்தக் கூலிப் பட்டாளமும் அந்த நாட்டில் விளையும் பொருள்களும் யாரிடம் இருக்க வேண்டும் என்பதற்காக வல்லரசுகள் போர் தொடுக்கும் விசித்திரம், முக்கியமாக இந்தியா சம்பந்தமாகத் தான் என்பது உமக்குத் தெரியாதா? சர்ச்சிலுக்கு இந்தியா வேண்டும். ஹிட்லருக்கு வேண்டும்; டோஜோவுக்கு வேண்டும். வியாபார வசதிகளுக்காக, இந்தியா, ரூஸ்வெல்டுக்குத் தேவை. இந்த நிலைமையில் இந்தியா, நம்மவர்களுடைய நாடாக எவ்வாறு இருக்க முடியும்" என்றேன்,

'ஹிந்துஸ்தானத்தை நம்மவர்கள் வாழும் தேசமாக மட்டுமல்ல, நம்மவர்கள் தாங்களே, அதை ஆளும் தேசமாகச் செய்ய வழி இல்லையா? துன்பமும் வறுமையும் தான் நமது வாழ்க்கையில் இருக்க வேண்டுமா? இன்பமும் செழிப்பும் இருக்கலாகாதா' என்றார் நண்பர்.

பிறன் பேரில் பழியா!

"நமது தற்போதைய வாழ்க்கை முறையை, விடாப் பிடியாகப் பிடித்து நாம் தொங்கிக் கொண்டிருக்கும் வரையிலும், அதை மாற்றி அமைக்க வேண்டியதற்கான தைரியமும் சிந்தனை சக்தியும் நம்மவர்களிடம் இல்லாத வரையிலும், பாகிஸ்தான் ஜின்னாவின் பேரிலும் சாம்ராஜ்யப் பெருமையில் ஆழ்ந்து கிடக்கும் சர்ச்சிலின் பேரிலும் பழியைப் போட்டு விட்டு, நமது கடமையைச் செய்தாகி விட்டது என்று நம்மவர்கள் வாளா இருக்கிற வரையிலும், நம்மவர்களுக்கு சுதந்திரம் இருக்காது; இன்பம் ஏற்படாது. அவர்கள் இந்த நாட்டை சுயேச்சையுடன் ஆளவும் முடியாது" என்றேன்.

'நீங்கள் இவ்வாறு பேசும் பொழுது தான், என் மனதில் மட்டுமல்ல, பெரும்பான்மையோரின் மனதில் திகில் உண்டாகின்றது. நம்முடைய நாட்டில், பண்டைக் காலத்திலிருந்து உயர்ந்த தத்துவம் இருந்ததில்லையா? நம்மவர்களிடம் உத்தமமான குணங்கள் இருந்ததில்லையா? நம் நாட்டில் மேதாவிகள் பிறக்கவில்லையா? அற்புதமான உண்மைகளை அவர்கள் கண்டு பிடிக்க வில்லையா? நம்மவர்கள், சில நாட்டார்களைப் போல, தான் தோன்றிகள் அல்ல. நம்மவர்களின் வாழ்க்கை நீண்ட காலத்துப் பயிராகும். அதை மாற்ற வேண்டுமென்று சொல்லும் பொழுது, எனக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் துக்கமும் திகிலும் தான் ஏற்படும்' என்று நண்பர் மிக்க வருத்தத்தோடு சொன்னார்.

"முள்ளை முள்ளால் தான் எடுக்கமுடியும்; அல்லது முன்னைப்போல கூரிய முனை கொண்ட கருவியால் எடுக்கலாம். முள் தைத்த இடத்தில் லக்ஷ ரூபாய் பெறுமான தனி வைரக் கல்லை வைத்துத் தேய்த்தால், அந்த முள்ளை வெளியே எடுத்துவிட முடியுமா? இதைத்தான் நம்மவர்கள் சரியாக உணராமல், ரொம்பவும் திண்டாடுகிறார்கள். உயர்ந்த தத்துவம் நம்மவர்களிடம் இருந்தது என்றும் உத்தமமான குணங்கள் இருந்தன என்றும் சொல்லுகிறீர். இவைகளை எல்லாம் ஏட்டிலே, எழுத்திலே தான் காணலாம். வாழ்க்கையில் காண்முடியாது" என்றேன்.

நீங்கள் அதம அந்நியனா?

'இந்தியாவைக் குறை கூற வேண்டும் என்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் அதமமான அந்நியனைப் போல, நீங்களும் பேசுவது, எனக்கு பிடிக்கவில்லை. நம்மவர்கள் அவ்வளவு கேவலமாக, நெறி தவறி வாழ்கின்றார்களா?' என்று சற்று மனக் கசப்புடன் நண்பர் பேசினார்.

"உமக்கு உண்மை கசப்பாயிருந்தால், நான் என்ன செய்யமுடியும்? வேண்டுமானால் நான் வாயை மூடிக் கொள்கிறேன். அதனால் நம்மவர்கள் முன்னேறப் போகிறார்களா? சர்ச்சில் போன்ற அந்நியர்களின் பேரில், பழியைப்போடுவதில் என்ன லாபம்? அவ்வாறு செய்தால், அது பாட்டிமார்கள் பேசுகிற பேச்சாகும். இங்கிலீஷ்காரர்களும் அவர்களுக்கு முன் வேறு சில அந்நியர்களும் இந்த நாட்டுக்கு வந்து, இதை ஜயித்து, இதை ஆள எப்படி முடிந்தது? அவர்கள் நூறு பேர்கள் வந்தார்கள்; நம்மவர்கள் இருபது பேர்கள் இருந்தார்கள் என்று பொய்க் கதை பேசுவதா? நமது நாட்டில் நம்மவர்கள் கோடிக்கணக்கில் வாழ்ந்தார்கள். அந்நியர்கள் வந்தது ஆயிரக்கணக்கில். என்றாலும் அவர்கள் ஜயித்தார்கள். நம்மவர்கள் தோற்றார்கள் ஏன் இப்படி ஆக வேண்டும்" என்று சற்று ஆத்திரத்தோடு சொன்னேன்.

'அவர்கள் மோசடிசெய்து, வெற்றிபெற்றார்கள்' என்றார். "அந்த மோசடியை முளையிலேயே அறியக்கூடாத முட்டாள்களாக நமது முன்னோர்கள் இருந்திருந்தால், கடவுள் தான் இந்த நாட்டையும் அதன் மக்களையும் காப்பாற்ற வேண்டும்" என்று நான் படபட வென்று கொட்டிவிட்டேன்.

'ஏன் பதறுகிறீர்கள்' என்றார் நண்பர். "ஏன்? நாற்பது கோடி மக்கள் வாழும் இந்த தேசத்தை, நான்கு கோடி ஐந்து கோடி மக்கள் வாழும் நாட்டார் ஜயித்ததும் ஜயிக்கப்பார்ப்பதும் எதனாலே? அதை நீர் யோசித்துப் பார்க்கவில்லை. நம்மவர்களின் வாழ்க்கை முறை சரியானதாக, காலத்துக்கு ஏற்றவாறு இருந்து, நம்மவர்களின் பொதுவான லக்ஷ்யத்தை, நாட்டுமக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு வாழ்ந்திருந்தால், ஹிந்துஸ்தானத்தின் பேரில், யாரும் கடைக்கண் பார்வையை செலுத்தமாட்டார்கள். இதை முதலிலே நீர் ஒப்புக் கொள்ளும்" என்றேன்,

வாழத் தெரியாதவன்

'நான் ஒப்புக்கொள்ளவாவது, மண்ணாய்ப் போகாவது' என்று நண்பர் வருத்தப் பட்டுக் கொண்டார்.

"வருத்தப்பட்டுப் பயனில்லை. நம்மவர்கள் பண்டைக்கால முதல் சாது வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுவதில், எந்த தெய்வத்துக்கு ப்ரீதி! சாதுவைக் கன்னத்தில் அறைந்து கையிலிருப்பதை மற்றவன் பறித்துக் கொண்டால், சாது தெய்வத்தினிடம் முறையிட்டுக் கொண்டால், தெய்வம் சாதுவைக் காப்பாற்ற முடியுமா? சாது என்று பெயரெடுத்து வந்தவன் அசல் சாது அல்ல. அவன் வாழத்தெரியாதவன்" என்றேன்.

'அப்படியானால்—' என்று நண்பர் இழுத்தார்.

"வார்த்தைகளை தவறாக உபயோகப்படுத்த வேண்டாம். கையாலாகாதவன் சாதுவல்ல. பிறருக்கு ஒன்றும் கொடுக்க முடியாதவன் கருமி அல்ல. ராணுவ உடை மட்டும் தரித்தவன் சிப்பாய் அல்ல. பிறன் செய்யக்கூடிய மோசடியை மோப்பம் பிடிக்க இயலாதவன் அறிவாளி அல்ல. சாரமும் பொருளும் இல்லாமல், சொற்களை அடுக்கிக்கொண்டு போகிறவன் புலவன் அல்ல. பழைய வழியை விட்டு விட்டு, புதிய பாதையை நாடுபவன் போக்கிரி அல்ல. காலத்துக்கு ஏற்றவாறு வாழத்தெரியாதவன் சனாதனி என்று பெயர் வைத்துக் கொண்டு, தான் அழியாத் தருமத்தை (சனாதனத்தை) கைக் கொண்டிருப்பதாக சொல்லிக் கொள்ளலாம். ஆனால், அவன் ஜப்பானிய வெடிகுண்டைப் பற்றிக் கேட்கும் பொழுது, அவனுடைய உடல் வியர்த்து சிலிர்த்துப் போகிறது. அந்தப் பரிதாபகரமான காக்ஷியைப் பார்த்து நான் மிகவும் துக்கப் படுகிறேன்" என்றேன்.

"உயர்ந்த வாழ்க்கைத் தத்துவம் தேவையில்லை என்பது உங்களுடைய கருத்தா" என்றார் நண்பர்.

முதலில் முள் தேவை

"யார் வேண்டாமென்று சொன்னார்கள். முள்ளை எடுப்பதற்கு, என்னிடம் உயர்ந்த தனி வைரம் இருக்கிறது என்று படாடோபம் செய்யும் தத்துவம் எனக்குத் தேவை இல்லை. முள் வேண்டும். பிறகு வைரத்தைப்பற்றிப் பார்த்துக்கொள்ளலாம்" என்றேன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

குண்டலகேசி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும், உரிமைச் சுற்றத்தாரும் மற்ற ஆடவரும் மகளிரும் உடன்சென்றனர். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நாற்படைகளும் அணிவகுத்து அரசனைச் சூழ்ந்து சென்றன. சமயவாதிகள் முதலிய அறிஞர்கள், வயிரத்தால் அலங்கரித்த பட்டத்து யானையின் மேல் இந்திரன் பிரதிமையை ஏற்றிக்கொண்டு முன் சென்றனர். உள்ளக்களிப்பால் மிக்கெழுந்த ஆரவாரத்துடன் கூட்டம் கூட்டமாய்ச் சென்றனர் மக்கள் யாவரும். இந்திரன் பிரதிமையை எடுத்துச் சென்ற அறிஞர்கள் பல வகை வாழ்த்துக்களைக் கூறிக் கொண்டு காவிரிச் சங்கமத் துறையை அடைந்தனர். பின்னர் அரசன் பரிவாரத்துடன் அங்கு வந்து சேர்ந்தான். யாவரும் காவிரிச் சங்கமத்தில் மங்கள ஸ்நானம் செய்தனர். அதன் பின் புதிய ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டனர். இந்திரதேவனுக்குப் பொற்குடத்தில் நீரை ஏந்தித் திருமஞ்சனம் செய்தனர். பூக்களைத் தூவி அலங்கரித்தனர். நாடு வள் முறும்படி வேண்டி வணங்கினர். பின்னர் அவ்விடத்திலிருந்து இந்திரனை யானை மீது ஏற்றி அவன் கோயிலில் கொணர்ந்து அமர்வித்தனர். "சோழ வேந்தன் நீடூழி வாழ்க" என்று மக்கள் வாழ்த்தினர். திருமால், சிவன், புத்தன், அருகன், பிரமன் முதலியவரது கோயில்களுக்குச் சென்று வணங்கினர். அரசன் நகர்க் காட்சியைக் கண்டுகளித்தபடி பரிவாரத்துடன் அரண்மனையை அடைந்தான்.

பொலிவுடன் விளங்கிய நகர்

பிறநாடுகளிலிருந்து வந்த ஆடவரும் மகளிரும், வணிகர்களும் இந்திர விழாவில் கலந்து கொண்டனர். இவ்விழாவைக் காண்பதற்குப் புதிதாகப் பலர் வந்துகொண்டிருந்தனர். நகர மக்கள் அளவில்லா உவகையுடன் மனம் ஒன்றிக்களித்திருந்தனர். மகர தோரணங்களால் அலங்காரம் செய்தவீதிதோறும் மன்றங்கள் தோறும் பொதுவிடங்கள் தோறும் கூட்டம் கூட்டமாய் நின்று காட்சிகளைக் கண்டு களித்தனர். காவிரி கடலுடன் கலக்கும் காட்சி தெருக் காட்சிகள் சோலைக் காட்சிகள் அரண்மனைக் காட்சிகள் அங்கங்கே நடக்கும் விநோத விளையாட்டுகளின் காட்சிகள் முதலியவற்றைக் கண்டு இளைப்பின்றித் திரிந்தனர். அந்நகரில் உள்ள தெய்வத தன்மை பொருந்திய பொய்கைகள், பலிபீடங்கள், தெய்வாலயங்கள் முதலியவற்றைக்கண்டு உலாவினர். கோயில்களிலும் மன்றங்களிலும் நாற்சந்திகளிலும் மாளிகைகளிலும், பலவகை வாத்தியங்களும் இடையறாது முழங்கின. அந்தணர்கள் அங்கங்கே வேதம் முதலியவற்றை ஓதினர். சமயவாதிகள் சமயவாதம புரிந்தனர். அருகர் பள்ளியிலும் பௌத்தர் பள்ளியிலும் அறவுரை நிகழ்த்தினர். தவப்பள்ளிகளில் மாதவர் ஓமம் வளர்த்து அக்கினி காரியங்களைச் செய்தனர். இசையுறு மண்டபங்களில் இசைவாணர் பாடினர். வேய்ங்குழல், வீணை, மத்தளம், முரசம், சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கின. நாட்டியம் வல்ல ஆடவரும் மகளிரும் நாட்டியம் பயின்றனர். பார்த்தவர் அதிசயிக்கும்படி அலங்காரம்செய்து கொண்டு ஆடவரும் மகளிரும் திரிந்தனர். தேர்கள், யானைகள் குதிரைகள் சிவிகைகள் சித்திர வண்டிகள் முதலியன எள் விழற்கு இடமில்லாமல் நகரெங்கும் இயங்கிக்கொண்டிருந்தன. வீதி தோறும் பலவகைப் பழங்கள், வெற்றிலை பாக்குகள் வாசனைப் பொருள் முதலியவற்றை அருகில் வைத்துக்கொண்டு வந்தோர்க்கு அளவின்றிக் கொடுத்தனர். அமுதை ஒத்த அறுசுவை அடிசில்களையும் நெய்யாலாக்கிய சிற்றுண்டிகளையும் எவர் எப்போது விரும்பினாலும் அப்போதே அளித்துக் கொண்டிருந்தனர்.

வீதிகளின் வனப்பு

நாற்புறத்துமுள்ள வீதிகள் தோறும் வணிகர்கள் பெரும் பொருள்களைக் குறைந்த விலைக்கு மகிழ்ச்சியோடு கொடுத்துக்கொண்டிருந்தனர். வீதியிடமெல்லாம் முத்துக்களும் மலர்களும் குங்குமக்களியும் சிதறிக்கிடந்தன. அந்தணர் வீட்டு வாயில்களில் சமிதைகள் சிதறிக்கிடந்தன. வாசனைப்பொருள் விற்போர் வீட்டு வாயில்களில் வாசனைப் பொடிகள் சிந்திக்கிடந்தன பிரபுக்கள் வாழும் வீதிகளில், செம்பொற் கிண் கிணிகளும், முத்துமாலைகளும், மலர் மாலைகளும். பலவகையாகச் சிதறிக் கிடந்தன. மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்து, விசாலமான வீதிகளைப்பெற்று, வண்டும் தும்பியும் குயிலும் பாடும் பல்வகைச் சோலைகளையும் கொண்டு அலங்கரிக்கப் பெற்ற அந்நகர், இந்திரன், தன் உரிமையோடும் நந்தன வனத்தோடும் வந்து தங்கினார் போன்று அழகுபெற்று விளங்கியது. சோழ வேந்தனுடைய தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினம் இந்திரவிழாச் சிறப்பால். இந்திரன் வாழும் பொன்னகர் இதுதானோ! என்று கூறும்படி விளக்கமுடன் தோன்றியது. சாவகர், சீனர், யவனர், துருக்கர், சிங்களவர் சிந்துதேசத்தார் முதலிய வணிகர் பலரும் இந்திர விழாவின் சிறப்பைக்கண்டு தமிழரின் நாகரிகத்தையும், தமிழகத்தின் பெருமையையும் எண்ணி வியப்புற்றனர் சோழ வேந்தனுடைய பேராண்மையையும் அந்நகரின் செல்வமிகுதியையும், நன்னெறியையும் எண்ணி எண்ணி அதிசயம் அடைந்தனர்,

இந்திர விழா தொடங்கப் பெற்றுச் சில தினங்கள் ஆயின. விழா தொடங்கப்பெற்ற நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் விழா கொண்டாடுவதில் மிக்க ஊக்கமும், உற்சாகமும் அதிகமாகிக்கொண்டிருந்தன. அவ் விழாக்காலத்திற்கிடையே ஒரு நாள் பெருஞ் செல்வர்களும், சோழவேந்தனால் நன்கு மதிக்கப்பெற்றவர்களுமாகிய வணிகர் வாழும் வீதியில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

(தொடரும்)

(முன் பக்கத்தொடர்ச்சி)

'நமது முன்னோர்கள் வாழ்ந்து வந்த வாழ்க்கை முறை தவறு' என்றார் நண்பர்.

"ஒரு வகையில், தவறு என்று தான் நான் நினைக்கிறேன். வாழ்க்கையை 'பாரமார்த்தம்' (பரலோகம்) 'வியவகாரிகம்' (இகலோகம்) என்று பிரித்து வாழப்பார்த்ததில், எத்தனையோ விபரீதங்கள் தோன்றி விட்டன. விபரீதங்கள் என்ற களைகள் தோன்றியதை, அவ்வப்போது களைந்து எரிந்திருக்க வேண்டும். மேலும் வாழ்க்கையை கூறுபடுத்தி வாழப் பார்ப்பது மதியீனம். வாழ்க்கை முழுசாகத்தான் இருக்க முடியும்; பல கூறுகளாக இருக்க முடியாது. பரலோக வாழ்க்கை என்று பெயர் வைத்துக்கொண்டு, ஒருவன், தன்னை அடிக்க வரும் முரடனுடைய காலைப் பிடித்துக் கொண்டால், அது பரலோக வாழ்க்கையாகுமா? இது வடிகட்டின கோழைத்தனமாகும். கோழையும் பயங்கொள்ளியும் சாதுக்களாக ஆகமாட்டார்கள். அவர்கள் சாதுக்கள் அல்ல. பேச்சில் உயர்ந்த தத்துவத்தை பிரகடனம் செய்து விட்டு, நடத்தையில் கேவலமாக இருந்தால் உயர்ந்த தத்துவத்தினால், அவனுக்கு என்ன லாபம்? மோசக்காரன், வஞ்சகன் என்ற பெயர் தான் அவனுக்குகிடைக்கும். சாது சனாதனிகளுக்கு, இப்படித் தான் கெட்ட பெயர் கிடைத்திருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை முறை, இனி இந்த நாட்டை எவ்விதத்திலும் காப்பாற்ற முடியாது' என்றேன்.

'துக்கமாயிருக்கிறது' என்றார் நண்பர்.

மதுரை விளையாட்டுப் போட்டிச் சங்க ஆண்டு விழா



மதுரை ஐக்கிய விளையாட்டுப் போட்டிச் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா சமீபத்தில் ஸ்ரீ கே எஸ். வேங்கடராமன் ஐ ஸி எஸ். தலைமையில் கொண்டாடப்பட்டது. —ஏ. வி.

மந்திரி திவானார்

மைசூர் சர்க்காரில் மந்திரிப் பதவி வகித்து வந்த ராஜ மந்திரப்ரவீண ஏ. வி ராமநாதன் பரத்பூர் சமஸ்தானத்திற்குத் திவானாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.



"எப்பொழுதும் உபயோகியுங்கள்"

வாசு சங்கு மார்க் பட்டணம்பொடி

உலகமெங்கும் புகழ்பெற்றது

வாசு பூபேந்தரநாத் & கோ.

மதரிராஸ் பெஜவாடா.

எச்சம்ம நாயகன்

"நியாயவாதி"

1564-ம் வருடம் நடைபெற்ற தலைக்கோட்டை யுத்தத்தில் விஜய நகர சேனை படுதோல்வியுற்றதும அந்நகரம் அழிந்ததும் உண்மையே. எனினும் அந்த சாம்பிராஜ்யம் வீழ்ச்சியுறவில்லை. விஜய நகரத்து அரசன் தனது தலை நகரைச் சந்திரகிரிக்கு மாற்றிக் கொண்டு அரசு புரிந்தான். அவனது ஆக்ஞைக்கு அடங்கியே சிற்றரசர்கள் நடந்து கொண்டனர். இது பெயரளவில்தான். அவர்களை அடக்கியாளுவதற்கு உரிய சக்தியும், திறமையும் விஜய நகர மன்னரிடம் இல்லையென்றே கூற வேண்டும்.

இந்த நிலைமையில் 1614-ம் வருடம் விஜய நகர மன்னன் வெங்கடராயன் இறந்தான். சாகும் தருவாயில் இருக்கையில் அவன் தனக்குக் கீழேயுள்ள சிற்றரசர்களை அழைத்து தனக்குப் பின் தனது சகோதரனது மகனும் தனது வார்சுமான ரங்கராயனை மன்னனாக ஏற்று அவனுக்கு முடி சூட்டும்படி கேட்டுக் கொண்டான். சிற்றரசர்களில் பெரும்பாலோர் ஆதரவு இசைந்தனர்.

மரணத்தை எதிர் பார்த்த மன்னனுக்கு மக்களில்லை. அரசி ஒரு குழந்தையை எடுத்து அது தனக்குப் பிறந்த குழந்தை யென்று கூறி அதைப் பரிவுடன் வளர்த்து வந்தாள். அவளது ஆசையைக் கெடுக்கக் கூடாது என்று எண்ணிய மன்னன் அக்குழந்தையைத் தனது அபிமான புத்திரனாய் ஏற்றுக் கொண்டான். அப்புத்திரனுக்குத் தக்க வயது வந்த பின் விவாகமும் நடைபெற்றது. அரசனின் மாமனும் சிற்றரசர்களில் ஒருவனுமான ஜக்கராயனுடைய மருமகளே அவனது மனைவி. வெங்கடராயனுக்குப் பின் அவன் மகுடம் புனைந்து அரசு செலுத்துவான் என்றும் அவனது பிரதிநிதியாய் தானே விஜய நகர சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை நடத்தலாம் என்றும் ஜக்கராயன் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். ஆனால் வெங்கடராயன் தனக்குப்பின் ரங்கையனே அரசனாக ஆட்சி புரியவேண்டும் என்று நியமனம செய்து விட்டு இறந்தான். இது ஜக்கராயனுக்கு பெருத்த ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும கொடுத்தது. சிம்மாஸனத்தில் ரங்கராயன் ஏறி ஆட்சிபுரியக் கூடாது என்று அவன் தீர்மானித்தான். அதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்யலானான்.

புதிதாய் அரசு செலுத்த ஆரம்பித்த ரங்கராயன் தனது சிற்றசர்களை வரவழைத்து ஒரு தர்பார் நடத்த விரும்பினான். அதுதான் தகுந்த சந்தர்ப்பமென்று எண்ணிய ஜக்கராயன் தனக்கு உதவி புரிய சம்மதித்த இரண்டு மூன்று சிற்றரசர்களையும் சேர்த்துக்கொண்டு படையுடன் சந்திரகிரியில் பிரவேசித்து அரசகுடும்பத்தைச் சிறைபடுத்தினான். தனது மருமகளின் கணவனை அரசனாக பிரகடனம் செய்தான். அவன் பெயரால் தானே சர்வ அதிகாரத்தையும் நடத்தத் தொடங்கினான்.

நயத்தையும் பயத்தையும் காட்டியும், பண்டங்களையும் பட்டங்களையும் வழங்கியும் நாடுகளையும் நகர்களையும் கொடுத்தும் அவன் சாம்பிராஜ்யத்துக்குட்பட்ட சிற்றரசர்கள் ஒருவனைத்தவிர—அனைவரையும் தன்வசப்படுத்தி விட்டான். தனது ஆட்சி நீடிப்பில் விசேஷ நம்பிக்கை பிறந்தது ரங்கராயனுக்கு யாதொரு மீட்சியுமில்லை என்று தைரியமும் கொண்டான்.

ஆனால் அவனது அதிகாரத்தை எதிர்த்தும் அவன் காட்டிய பொம்மை அரசனை மன்னனாக ஏற்க மறுத்து நின்றான் எச்சம்ம நாயகன் என்ற சிற்றரசன், சந்திரகிரிக்கு வந்து புது மன்னனுக்கு மரியாதை செலுத்தும்படி ஜக்கராயன் விடுத்த ஸ்ரீமுகத்தை நிராகரித்த அவன், 'எனது அரசன் ரங்கராயர், அவருக்குப்பணிசெய்யநான்கடமைப் பட்டவனேயன்றி வேறு யாரையும் நான் அரசராக மதிக்கமுடியாது என்று பதில் எழுதியனுப்பினான். சந்திரகிரிக்கு வர அவன் இசையவில்லை. ஜக்கராயன் தன்னைச் சிறையில் இடுவான் என்பது அவனுக்கு நிச்சயம் தெரியும்.

ரங்கராயனும் அவனது குடும்பமும் பாதுகாப்பில் வைக்கப் பட்டிருப்பது அவனுக்கு சொல்லொணு வேதனையைக் கொடுத்தது. எப்படியேனும் அரச குடும்பத்தை மீட்க வேண்டும் என்பது அவனது அவா. அதற்காக அவன் முயற்சிகள் எடுத்சொள்ளலானான்.

மாறுவேடந் தரித்து அவன் சந்திரகிரிக்குச் சென்றான். பாதுகாப்பில் இருந்த அரச குடும்பத்தின் ஆடைகளை வெளுக்கும் வண்ணானை அவன் சரிப்படுத்திக்கொண்டான் அவனுக்கு ஏராளமான பொருள்கள் கொடுத்தான் அரசனுக்கு ரகசியமாய் ஒரு கடிதம் எழுதி அதை வண்ணானிடம் கொடுத்தான், வண்ணான் அதை தான் வெளுத்து வைத்த ஆடைகளிடை ஒளித்துக்கொண்டு சென்றான். ரங்கராயனிடம் ஆடைகளை அவன் கொடுக்கும்பொழுது கடிதத்தையும் குறிப்பாக நீட்டினான். அதில் "மகாராஜாவின் இரண்டாவது புத்திரரை இவனுடன் அனுப்ப வேண்டும். அவன் அவரை என்னிடம் பத்திரமாய் சேர்ப்பிப்பான் கவலை வேண்டாம். எச்சம்ம நாயகன்" என்று எழுதப்பட்டிருந்தது. ரங்கராயன் அப்படியே செய்ய இசைந்தான்.

சற்று நேரத்துக்குப்பின் வண்ணான் ராஜ குடும்பத்தால் களையபபட்ட அழுக்கு உடைகள் மூட்டையுடன் வெளியே சென்றான். வாசலில் நின்ற காவற்காரர்களுக்கு அவ்வழுக்கு மூட்டையில் அரசனது இரண்டாவது மகன் ஒளிக்கப்பட்டிருந்தான் என்பதை எப்படி அறிவார்கள்? இப்படி வெளியேற்றப்பட்ட அரசிளங்குமாரன் எச்சம்ம நாயகனது பந்தோபஸ்தான அடைக்கலத்தைப் பெற்றபின் அரச குடும்பத்தின் கவலை நீங்கியுது என்பதில் என்ன சந்தேகம்?

ஆனால் ஜக்கராயன் சும்மா இருப்பானா? அவனது ஆத்திரமும் ஆக்ரோஷமும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ரங்கராயன் மீதும் அவன் குடும்பத்தார் மீதும் இன்னும் பலமான காவல்களையும் கட்டுபபாடுகளையும் ஏற்படுத்தினான். கேவலமான கைதிகளைப்போல் அவர்களை நடத்தினான். அவனது கொடுமையும் கோபத்தையும் அவர்கள் பொறுமையுடன் சகிக்கும்படி நேரிட்டது. அவர்களது துர்ப்பாக்கியமே போலும்.

ஆனால் எச்சம்ம நாயகனும் மௌனமாயிருக்கவில்லை. தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆட்களில் சிலரை அவன் சந்திரகிரிக்கு அனுப்பினான். ரங்கராயனது சிறைக்கு வெளியேயிருந்து கொண்டு அவர்கள் இரகசியமாகச் சுரங்கம் ஒன்று குடைய ஆரம்பித்தனர். சில நாட்களுக்குப்பின் அரசன் இருந்த இடத்துக்கும் சிறைக்கும் வெளிப்புறத்துக்கும் ஒரு பாதையை அவர்கள் உண்டாக்கிவிட்டனர்.

நான் என் சருமத்தின் அழகைக் காப்பாற்றுவது போல, நீங்களும் செய்யுங்கள்

"லக்ஸ் டாய்லெட் சோப்பினுல் இது மிக சுலபம்" என்றுர் மும்தாஸ் சாந்தி

இப்பொழுது சினிமா உலகில் வெற்றி பெற்று கீர்த்தி வாய்ந்த நடன மாது மும்தாஸ் சாந்தி "நான் செய்வதுபோல் செய்" என்று மேலும் கூறுகிருர். லக்ஸ் டாய்லெட் சோப்பை தவருமல் உபயோகித்தால் உங்களுடைய சருமம் தூய்மையாகவும், இளமையாகவும் இருப்பதைக்கண்டு சந்தோஷிப்பீர்கள்.

LTS. 79-172 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

இந்தியா வந்த அமெரிக்க ஸோல்ஜர்கள்

அமெரிக்க ஸோல்ஜர்கள் இந்தியாவிலுள்ள போர்முனைக்குக் கப்பலில் அழைத்து வரப்படுகின்றனர். அவர்கள் கப்பலில் இருந்து கொண்டே தங்களது உடுப்புகளைச் சுத்தம் செய்து கொள்கிருர்கள்.

தன்னை விடுவிக்க வந்த மனிதர்களைக் கண்ட ரங்கராயனின் மகிழ்ச்சியை எப்படி எழுத்தால் குறிப்பிடுவது? தன்து குல தெய்வம்போல் உதவி எச்சம்மா நாயகனை வாழ்த்தியவண்ணம் அவன் சிறையை கடப்பதற்குத் தயாரானன். ஆனல் அதிர்ஷ்டம் அவன் பக்கம் இல்லை. சுரங்கத்தின் வெளியே வந்த தான்.

அவன் வந்ததுதான் தாமதம். வெளியே ரோந்து சென்று கொண்டிருந்த காவலாளிகளின் திருஷ்டி அவன் மீது விழுந்து விட்டது. அதன்பின் அவன் மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ஜக்கராயனின் கொடூரமும் கோபப்பொறியும் உச்ச நிலையை அடைந்தன. அப்பாவியாய் தவித்த அரசனையும் அவனது மனைவி மக்களையும் படாத பாடுகள் படுத்தினன்.

ஆனல் எச்சம்ம நாயகன் தன்னுடைய முயற்சிகளை கைவிடுபவனன்று ஒரு சமயும் ஜக்கராயன் தனது பரிவாரங்களுடனும் படைகளுடனும் சந்திரகிரியை விட்டு யாத்திரை சென்றிருந்தபொழுது அவன் ஒரு வீரனை ஒரு சிறு படையுடன் அனுப்பி சந்திரகிரியைக் கைப்பற்றி அதனுள் சிறைகிடந்த அரச குடுபபத்தை விடுவிக்கும்படி அனுப்பினன் ஆனல் இந்தத் தடவையும் துரதிர்ஷ்டம் குறக்கிட்டது. ஜக்கராயன் சந்திரகிரிக்கு தனது சேனையுடன் திரும்பினன். ரங்கராயனை மீட்க வந்தவர்கள் அனைவரும் கைதியாக்கப்பட்டனர். அவர்கள் மரண தண்டனையனுபவிக்கும்படியாயிற்று அந்தோ பரிதாபம்!

அதன் பின் ரங்கராயனை உயிருடன் வைப்பது ஆபத்து என்று ஜக்கராயன் கருதினன். அரச குடும்பத்தை அழித்து விடும் கொடுமையை அவன் செய்யவும் துணிந்தான். தனது சகோதரனை அவன் சிறைச்சாலைக்கு அனுப்பினன். ஜக்கராயனது ஆணையைத் தாங்கிய வண்ணம் அவன் ரங்கராயன் முன் நின்றான். மரணத்துக்குத் தயாராகவே இருந்தான் மாஜி மன்னன். அதற்குமுன் அவனுக்கு ஒரே கவலை. தனது நிர்பாக்யமான குடும்பத்தை ஜக்கராயனின் கொடுமைக்கு உள்ளாக்கிவிட்டு பிரயோகம் செய்ய இஷ்டமில்லை தனது கருததை அவன் மனைவியிடமும் மக்களிடமும் தெரிவித்தான் அவர்களும் அவனுடன் முன்னுயிர்விட சித்தமாயினர். தங்களது துன்பங்களுக்கு மீட்சியளிக்கப்போவது அவனது வாளாயுதமே என்று அவர்கள் மகிழ்ந்தனர். அரசிக்கும் அரசிளங்குமாரர் இருவருக்கும் மூத்த அரசபுத்திரிக்கும் அரசனுடைய வாளாயுதம் விடுதலையளித்தது. ஆனல் கடைசியாய் நின்ற தனது ஐந்து வயது புத்திரியை வெட்ட அவன் மனம் துணியவில்லை அவள் பக்கம் செல்லாமல 'அவன் தன்னையே குத்திக்கொண்டான். குழந்தையான ராஜ புத்திரியைக் கொல்லும் கொடுமை ஜக்கராயனின் சகோதரனுக்கே சித்தித்தது.

இப்படி அரச குடும்பம் அழிக்கப்பட்ட செய்தி நாடெங்கும் பரபரப்பையும் ஆத்திரத்தையும் மூட்டியது ஜக்கராயனுக்கு விரோதமாய் பல சிற்றரசர்கள் கலகம் செய்ய ஆரம்பித்தனர். அததான் தருணமென்று நினைத்த எச்சம்ம நாயகன் தன்னிடம் பத்திரமாயிருந்த ராஜகுமாரனை ரங்கராயனின் இரண்டாவது புத்திரனை-மன்னனாக பிரகடனம் செய்தான்: ஒரு படையையும் திரட்டினன். ஜக்கராயன் மீது போர் தொடுத்தான் போரில் ஜக்கராயனின் படைகள் புறம் காட்டி ஓடின. ஜக்கராயனும் சந்திரகிரியை விட்டு காட்டுப் பிரதேசத்துக்கு ஓடினன். வெற்றியுடன் நகர் புக்க, எச்சம்ம நாயகன் புது அரசனுக்கு முடிபுனைப்பித்தான். சாம்ராஜ்ய மெங்கும் அவனது புகழ் ஆர்த்தது.

இயற்கைப் பாட்டு

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தமாதிரியான பாடல்களிலே நெஞ்சைப்பறிகொடுத்தவர்கள் பலர் சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள், ஆழ்வார்கள் நாயன்மார்கள், கம்பன் முதலிய கவிஞரனைவரும் இந்தக் கூட்ட முதப்பாட்டிலே உள்ளதைக் கொள்ளை கொடுத்தவர்களே.

அவர்கள் நூல்களை எடுத்துப் பாருங்கள். இளங்கோவடிகள், பெண்கள் அம்மானை ஆடும் போதும் பந்தாடும் போதும் பாடும் பாட்டுக்களைக் கவனித்திருக்கிறுர். அந்த மாதிரியான பாடல்களைத் தாம் இயற்றிச் சிலப்பதிகாரத்தில் சேர்த்திருக்கிறுர். அம்மானைவரி, கந்துகவரி என்ற பெயரோடு அவருடைய காவியத்திலே உள்ள பாடல்களைப் படிக்கும் போது முன்னே சொன்ன இயற்கையோடிணைந்த பாட்டுக்களைக் கேட்டு மயஙகினவர் இளங்கோவடிகள் என்பதை உணரலாம். திருவாசகத்தில் தோள் நோக்கம், சாழல், திருவுந்தி என்ற பெயர்களால் வரும் பாட்டுக்களெல்லாம் இந்த இயற்கைப் பாட்டுக்களின் போலிகளே.

அந்தப் பாட்டுக்களின் உருவம் உலகில் பாமர மக்கள், குழந்தைப் பெண்கள் பாடும் பாடல்களிலிருந்து திருடிக் கொண்டது; கருத்து மாணிக்க வாசகருடையது. அவற்றின் உருவத்திலும், ஓசையிலும் "நாடோடி" உலகத்தைக் காண்கிறேம்; கருத்திலே மாணிக்க வாசகரை உணர்கிறேம்.

இளங்கோவடிகள் முதல் பாரதியார் வரையில் கேட்டு அநுபவித்த இயற்கைப் பாட்டுக்களை நாமும் கேட்கப் பழக வேண்டாமா?

ஸன்லைட் கெமிஸ்டு சொல்லுகிருர் . . .

"அசுத்தமான ஆடைகளிலிருந்து அழுக்குகளை தாஞகவே போக்கக்கூடிய நுரைக்கே சுயமாக வெளுக்கும் நுரை என்று பெயர். அது எப்படி வேலை செய்கிறது? ஸன்லைட் நுரையில் "பிராணசக்தி" வாய்ந்த சோப் இருக்கிறது. 'பிராணசக்தி' வாய்ந்த சோப்பிற்கு அழுக்கைப் போக்கக்கூடிய சக்தி நிறைந்திருக்கிறது. அது தொட்ட உடன் அழுக்கைப் பற்றிக்கொண்டு தன்னுடன் அழுக்கை எடுத்துவிடுகிறது. ஆகையால் அழுக்கடைந்த ஆடைகளை ஸன்லைட் நுரையினுல் கசக்கினுல் இந்த 'பிராணசக்தி' யானது உடனே வேலை செய்து நுரையை தண்ணீரில் அலசின உடன் அழுக்குப் போய்விடுகிறது."

ஸன்லைட் சோப்.

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 62-33 TM ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

நீதிக் கதை

கலகத்தில் சிக்கிக்கொண்டது

★

ஏ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

பம்பாயில் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் பெரிய கலகம் ஒன்று நடந்தது. அந்தக் கலகம் நடந்த இடத்தில் ஜனங்கள் நடமாடுவதற்குக்கூட பயப்பட்டனர். ஒன்றிலும் சம்பந்தப்படாதவர்கள் குத்திக் கொல்லப்பட்டனர். 'பைதோனி' என்னும் கலகம் நடந்த ஒரு இடத்திற்குச் சென்று கலகத்தை நேராகப் பார்க்க வேண்டுமென்று அப்புவுக்குத் தோன்றிற்று. 'உன் உயிருக்கு ஆபத்து நேரிடும். நீ ஹிந்துவாதலால், உன்னை மகம்மதியர்கள் குத்திக் கொன்று விடுவார்கள்' என்று வைத்தியர் சொன்னார். 'நான் மகமதியர்களைப் போல் துருக்கிக் குல்லாயை அணிந்து கொள்வேன்'' என்று அப்பு சொன்னான். 'அப்போது ஹிந்துக்கள் உன்னைக் குத்திக் கொன்று விடுவார்கள்'' என்று வைத்தியர் எடுத்துச் சொன்னார். நான் இரு திறத்தாரையும் ஏமாற்றி விட்டுத் தப்பித்துக் கொள்வேன் என்றான் அப்பு. 'நீ ஏன் ஆபத்தைத் தேட வேண்டும்?'' என்றார் வைத்தியர். ஆபத்தில்லாமல் லாபமடைய முடியுமா?'' என்று அப்பு சொன்னான். ''இதனால் நீ என்ன லாபத்தை அடையப் போகிறாய்?'' என்று வைத்தியர் கேட்க, ''உலகஞானம் என்பது எனக்குக் கிடைக்கும். 'உலக ஞானம் என்பது தங்கத்தை விட மேலானதல்லவா?'' என்றான் அப்பு-'ஞானம் என்பதற்கு நிறையுண்டா?'' என்று பிஜுரின் மனைவி கேட்டாள். 'எல்லாம் நம் மனோபாவத்தை அனுஸரித்திருக்கிறது. மேலே தடவுவதனால் நோவுண்டாகாதிருக்கும் மருந்தின் சமாச்சாரம் நமக்குத் தெரிந்திருந்ததால், குற்றவாளி இரண்டு வருஷம் சிறைச்சாலை சென்றான். சிகிச்சை தெரிந்திருப்பதனால் பிஜுர் ஒவ்வொரு நோயாளியிடமிருந்தும் ஐந்நூறு ரூபாக்களைச் சம்பாதிக்கிறார்''. என்றான் அப்பு. ''நீ இப்போது கூறும் உலகஞானம் எவ்வளவு விலையுள்ளது?' என்று பிஜுரின் மனைவி கேட்க இப்போது சொல்ல முடியாது'' என்று அப்பு பதிலளித்தான்.

அப்பு ஒரு மகம்மதியனைப் போல் வேஷம் போட்டுக் கொண்டான். பெரிய நிஜார். மேலங்கி, குல்லாய் முதலியவைகளை அணிந்துகொண்டு, ஹிந்து மதத்தவர்கள் அணிந்துகொள்ளும் உடையை ஒரு சிறிய பெட்டியில் வைத்து அப்பு அப்பெட்டியை கையில் எடுத்துக் கொண்டான். நீ ஏன் முதன் முதலில் மகம்மதியனைப் போல வேஷம் போட்டுக் கொண்டாய்?'' என்று பிஜுரின் மனைவி அப்புவைக் கேட்டாள் ''அஹிம்சையில் நம்பிக்கையுள்ள ஹிந்து மதத்தவர்கள் சிலர் இருக்கின்றனர். ஆனால் மகம்மதியர்களுக்குள் அத்தகைய எண்ணமிருப்பவர்களே இருக்கமாட்டார்கள்' என்று அப்பு பதிலளித்தான். வைத்தியரும் அவருடைய மனைவியும், அவனுக்கு வெற்றியுண்டாகும்படி கூறி அவனை அனுப்பினர்.

அப்பு பைதோனிக்குச் சென்றான். அவ்விடத்தில் கூட்டமே இல்லை. சந்துகளின் வழியாக மகம்மதிய உடை தரித்துக் கொண்டு அவன் அலைந்து கொண்டிருந்தான். திடீரென்று ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன் ஒருவன் தோன்றி, அப்புவின் இடது கையில் கத்தியால் குத்தி விட்டு ஓடிப்போய் விட்டான். 'நான் ஒரு மகம்மதியனல்ல. நான் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்' என்று வலி பொறுக்க மாட்டாமல் அப்பு கதறினான். உடனே எங்கிருந்தோ, இருந்திருந்தாற்போலிருந்து ஒரு மகம்மதியன் ஓடி வந்து அவனுடைய வலது கையில் கத்தியால் குத்தி விட்டுச் சென்றான். அப்பு வலி தாங்கமாட்டாமல் கதறினான். போலீஸ்காரன் ஒருவன் வந்து அப்புவை மோட்டார் வண்டியில் ஏற்றி ஆஸ்பத்திரியில் கொண்டு போய்விட்டான். அதிர்ஷ்டவசமாக காயம் பலமானதாக இல்லாமலிருந்தது. அப்புவின் அபிப்பிராயப்படி, பிஜுருக்கு டெலிபோன் மூலம் அப்புவின் ஸ்திதி அறிவிக்கப்பட்டது. பிஜுர், ஆஸ்பத்திரிக்குச் சென்று தன்னுடைய மோட்டார் வண்டியில் அப்புவை ஏற்றிக்கொண்டு தன் வீடு சேர்ந்தார். பிஜுரும் அவர் மனைவியும் அப்புவின் நிலைமையைக் கண்டு மனம் வருந்தினர். 'மதத்தினால் ஏற்படும் கலகத்தில் கலந்துகொள்பவர்கள், நாக சர்ப்பங்களைவிடக் கொடியவர்கள் என்பதில் சந்தேகமில்லை' என்றான் அப்பு 'அவர்கள் ஒருவரை ஒருவர் குத்திக் கொன்று கொள்ளாமல் உன்னை ஏன் தாக்கினர்?' என்று பிஜுரின் மனைவி கேட்டாள். 'மற்றவனிடம் கத்தி இருக்கிறதென்பதை அவர்கள் அறிவார்கள், ஆகையால் கத்தியில்லாத என்னை அவர்கள் என்னை குத்திவிட்டனர். நானும் துருக்கிக் குல்லாயிக்குப் பதிலாக ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு போயிருக்கவேண்டும்' என்று சொல்லி அப்பு வருத்தப்பட்டான். 'நீ ஏன் கத்தியைக் கொண்டு போகவில்லை?' என்று வைத்தியரின் மனைவி கேட்டாள் 'கத்தியைக் கொண்டு போயிருந்தால், என்னைப் போலீசார் கைது செய்திருப்பார்கள். அப்போது நான் ஆஸ்பத்திரியிலிருப்பதற்குப் பதிலாக சிறைச்சாலையில் இருந்திருக்க வேண்டும். சிறைச்சாலையைவிட ஆஸ்பத்திரியே மேலென்பது என்னுடைய அபிப்பிராயம்'. என்றான் அப்பு. 'அம்மா, இந்த உலக அனுபவம், இன்னும் பத்து நாளைக்குள் என்னை சாப்பிட்டுவிடும். வைத்தியரே, நான் சொல்வது சரியா?' என்று ஆலோசித்துக் கொண்டே அப்பு மெதுவாகச் சொன்னான் 'இன்னும் பதினைந்து நாட்கள் பிடிக்கும். சிலர் வாழ்க்கையில், இந்தக் கலகத்தினால், ஆறடி உயரம் குன்றிப்போயிருக்கிறது. ஆறுகுண்டு விறகுகூட இந்த உலக அனுபவத்தை அறிந்துகொள்ளச் சென்ற சில விஷயத்தில் செலவாகியிருக்கிறது. ஆனால் உன் விஷயத்தில் அவ்வளவு ஜாஸ்தியாக நஷ்டம் ஏற்படவில்லை' என்று பிஜுர் சிரித்துக்கொண்டே சொன்னார். 'அதனால் தான் இந்த உலக அனுபவம் தங்கத்திற்கு ஈடானதென்று சொன்னேனே யொழிய. விறகுக்கு ஈடானதென்று நான் சொல்லவில்லை' என்று அப்பு சொன்னான்.

நரஸூஸ் காபியைப் போன்ற புத்துயிரளிக்கும் பானம் வேறொன்றுமில்லை

கடுமையான வேலைக்கோ, விளையாட்டுக்கோ பிறகு உங்கள் களைப்பைப்போக்கி ஊக்கமளிக்கும் பானம்.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNCK-11-TM

(முன் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினருக்கும் சங்கடம் விளைவது கண்கூடு. ஆனால், அதற்கான பொறுப்பைக் காங்கிரஸ் மீது சுமத்துவது, அதன் மீதுள்ள துவேஷத்திற்கே ருசுவாகும். வீண்பழி சுமத்தும் வேலையில் காட்டும் சிரத்தை, உள்ள நிலைமையைக் கண்டறிவதில் திரும்ப வேண்டும்.

யாரும் தற்போதைய நெருக்கடி நீடிக்க விரும்பவில்லை என்பது தெளிவு. சொத்து, சுதந்திரம் மிகுந்தோர் சகஜமாக ஸர்க்காரையே ஆதரிப்பது வழக்கம். ஆனால், இன்று அவர்கள்கூட அதிகாரிகளின் போக்கை ஆதரிக்கவில்லை. தகராறைத் தீர்க்க உடனே வழிகாண வேண்டுமென்று இந்திய வர்த்தகர் சங்கம், பங்குப் பரிவர்த்தனை ஸ்தாபனம், கிழக்கிந்தியா பருத்திச் சங்கம் போன்ற பல ஸ்தாபனங்களும் ஒரு முகமாக வற்புறுத்தி வருகின்றன. இத் தகராறு யுத்த முயற்சியில் இந்தியர் பூரணமாகப் பங்கெடுத்துக்கொள்ளப் பெருந் தடையாக இருப்பது தெளிவு. தடை நீங்குவதற்கான வழிபற்றி சந்தேகம் கொள்ள இடமில்லை. காலப் பிற்பாடாகுமுன் டில்லியிலும், லண்டனிலும் பின்புத்தியாவது உதயமாகுமா?

—இம்மாதம் 14-ந் தேதி எழுதப்பட்டது.

நல்லவர் கதி

சூரபா என்னும் சமஸ்தானத்தில் பத்திரிகை நிருபர் ஒருவர் இருந்தார். பத்திரிகைகளின் அடக்கு முறைச் சட்டங்களைக் குறித்து எழுதும்போது, நல்ல மனிதர்கள் சூரபா என்னும் சமஸ்தானத்தில் வசிப்பதற்கு யோக்கியதையில்லை யென்று அவர் பத்திரிகையில் எழுதிவிட்டார். அன்றிரவு சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் அவரை ஒரு மோட்டாரில் ஏற்றிக் கொண்டுபோய், சமஸ்தான எல்லைக்கு அப்புறத்தில் விட்டுவிட்டனர். சமஸ்தானாதிபதியால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு அவரிடம் கொடுக்கப்பட்டது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: 'நல்ல மனிதர்கள் வசிப்பதற்கு சூரபா சமஸ்தானம் தகுந்த இடமல்ல. நீயோ நல்ல மனிதன். ஆதலால், இனிமேல் எப்போதும் சமஸ்தானத்திற்கு வெளியே நீ வசிக்க வேண்டும்.'

சர்வாதிகாரி டோஜோ


சர்வாதிகாரி டோஜோ

நேச நாடுகளுக்கெதிராக ஜெனரல். டோஜோ யுத்தம் தொடுத்தது மல்லாமல் அதைத் தமது யுத்தப் பிரகடனத்தில் ''தர்ம யுத்த''மென்றும் குறிப்பிட்டார். அவசியமானால் இது 100 வருஷங்கள் வேண்டுமாயினும் நடக்குமென்றும் சொன்னார். அவர் எப்படி சர்வாதிகாரியாக வந்தார்? என்பது குறித்தும், அவரது கொள்கை என்ன? வென்பதுபற்றியும் டோக்கியோவில் ''நியூயார்க் டைம்ஸ்'' பத்திரிகையின் நிருபராகவிருந்த ஆட்டோ டிடாலிஸ்கஸ் என்பவர் எழுதியிருக்கிறார். அவர் ஜப்பானிலிருந்து திரும்பியவர்.

இப்போது ஜப்பானுக்குச் சர்வாதிகாரியாக விளங்குகிறாரே டோஜோ! அவரைப் பற்றி ஒரு வருஷத்துக்கு முன்னால் உலகத்தில் யாருக்காவது தெரியுமா? தெரியாது. ஏன் டோக்கியோவிலேயே அரசியல் துறையிலிருப்பவர்களுக்குக்கூட அவரைபபற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லையாயின் வெளி உலகில் இருப்பவருக்கு எப்படித் தெரியப் போகிறது? சென்ற அக்டோபர் மாதத்தில் 3-வது கோனேயியின் மந்திரி சபை ராஜிநாமாச் செய்தபோது அடுத்த பிரதம மந்திரி யாரென்பது பற்றி பலவாறாக ஹேஷ்யங்கள் கிளம்பின. அப்போது டோஜோ தான் பிரதம மந்திரியாக வரக்கூடியவர். என்று யாரும் சொல்லவில்லை.

டோஜோவின் சர்வாதிகாரம்

ஆனால் இன்று டோஜோ சர்வாதிகாரியாக விளங்குகிறார். சர்க்கார் அதிகாரங்கள் எல்லாம் அவர் கையில் இருக்கின்றன. ராணுவ அதிகாரமும் அவரிடந்தான். அந்நியநாட்டு மந்திரிப் பதவியைக்கூட அவரே சேர்த்து வகிக்கிறார்.

ஹிட்லர் என்றால் ஜெர்மனி; ஜெர்மனி என்றால் ஹிட்லர் என்று நாஸிகள் பறைசாற்றுகின்றனர். ஆனால் டோஜோவோவெனில் அப்படியல்ல. ஹிட்லர், முஸோலினியைப் போல் தானாகவே டோஜோ தன்னைச் சர்வாதிகாரியாக வரித்துக்கொள்ளவில்லை. ஜெர்மனியிலும், இத்தாலியிலும், ஹிட்லரும் முஸோலினியும் தாங்களாகவே சர்வாதிகார முறையை ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால் டோஜோவின் சர்வாதிகார முறை அத்தகையதன்று. அது கூட்டுப்பொறுப்பில் ஏற்பட்டது எனவே இன்னொரு சர்வாதிகாரி வந்தாலுங்கூட அம்முறை தொடர்ந்து நீடிக்கும்.

தாயின் உபதேசம்

ஜெனரல் ஹிடிகி டோஜோவின் தந்தை பெயர் ஜெனரல் ஈகியோ டோஜோ என்பதாகும். ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் அவர் பெரிய ராணுவ தந்திரியென்று கூறப்படுவதுண்டு. ஹிடிகி டோஜோ பள்ளிக்கூடத்தில் தன் பாடங்களைப் படிக்காமல் அதற்குப் பதிலாக தமது சகமாணவர்களிடம் பிரமாதமாக மேற்படி சம்பவத்தைப்பற்றிப் பிரதாபம் பேசுவார். இவருடைய அகந்தைப் பேச்சு ஒரு மாணவருக்குச் சகிக்க முடியவில்லை. அவன் டோஜோவை உதைத்துத் தள்ளிவிட்டான். டோஜோ அழுதுகொண்டே தன் தாயாரிடம் ஓடினார். டோஜோவின் தாயார் தன் மகனைத் தேற்றி நற்புத்தி கூறினாள். டோஜோ ஏன் இம்மாதிரி அடிபடும்படி நேர்ந்ததென்பதையும் அவள் விளக்கிச் சொன்னாள். ''ஞானமும், திறமையும் இல்லாமல் மிருக பலம் மட்டுமிருந்தால் போதாது'' என்று அவள் அவனுக்குத் தெளிவுபடக் கூறினாள். டோஜோ தன் தாயின் உபதேசத்தை மனதிற்கொண்டார். ஜப்பானியப்பத்திரிகைகளில் இவரது ஜீவிய சரிதைகள் வெளிவந்திருக்கின்றன. அவற்றிலிருந்து 'ஜியூ ஜிட்ஸூ' (ஜப்பானிய குஸ்தி) என்ற விளையாட்டில் திறமையடைந்தார். தமது பலக் குறைவை தந்திர முறை கொண்டு சீர்படுத்திக் கொண்டார்.

உயர் பதவி எய்திய விதம்

ஜெனரல் டோஜோ ராணுவத்தில் முதன்மையாக நின்று சேவை செய்திருக்கிறார் என்றாலும் அவர் பிரதானமாக அரசியல் விவகாரங்களில் ஜெனரலாகவிருந்தே உயர் பதவி எய்தினார்.

(1) ஸதா யுத்தம் வேண்டுமென்று கோஷித்தார்.

(2) ராணுவத்தின் சார்பாகப் புதிய ஏற்பாடு வேண்டுமென்று ''இளம் அதிகாரிகளின் கோஷ்டி'' கோரிக்கை தெரிவித்து வந்தது. இதற்காக முதலாளிகளாகவும், ஜனநாயக முறையில் அரசியல் வாதிகளாகவும் உள்ளவர்களைச் சுட்டுத்தள்ளவும் அவர்கள் தயங்கவில்லை. தங்கள் கோரிக்கை பூர்த்தி பெற தங்களுக்கு மேலாக அதிகாரம் வகிப்வர்களையும் சுட அவர்கள் பின்வாங்கவில்லை. இந்தக்கோஷ்டியில் டோஜோ சேர்ந்திருந்தார்

(3) புரட்சிக்காரர்கள் நடவடிக்கைகளைக் கவனித்துக் கண்காணிப்பதுமட்டுமின்றி தமது சக அதிகாரிகளையும் கண்காணிப்பதற்காக டோஜோ போலீஸ் சர்வீஸில் சேர்ந்தார். இவற்றின் மூலம் அவருக்கு அதிகாரம் கிட்டியது.

ராணுவ வாழ்க்கை

டோஜோ 1884-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் டோக்கியோவில் பிறந்தார். 1905-ம் வருஷம் ராணுவ அகாடமியில் பட்டம் பெற்றார். ராணுவத்தில் சேர்ந்து லெப்டினெண்டு பதவியடைந்தார். ராணுவ அதிகாரிகள் காலேஜில் சேர்ந்து 1915-ம் வருஷத்தில் ராணுவப் பட்டம் வாங்கினார். 1919-ம் வருஷத்தில் பர்லினில் ராணுவ அதிகாரியாக விருந்தார். முதல் மகா யுத்தத்தில் ஜெர்மனி வீழ்ச்சியுற்ற பிறகு இந்த சம்பவம் நிகழ்ந்தது: ராணுவ அதிகாரிகள் காலேஜில் போதகாசிரியராக விருந்தார். பின்பு யுத்தமந்திரிக்கு மெய்க்காப்பாளராகவும் படை திரட்டும் பிரிவின் அதிகாரியாகவும் பதவி தாங்கினார். இப்பதவிகளெல்லாம் காரியாலயங்களிலிருந்தபடியே கவனிக்கக்கூடியவையென்பது தெளிவு. முதலாவது காலாட் படைப் பட்டாளத்துக்குத் தலைவரானபோது டோஜோ அரசியலில்தமக்குள்ள ஆற்றலை வெளிப்படுத்தச் சாத்தியமாயிற்று.

ஜெனரல் ஸாடோ அராகி யுத்த மந்திரியாக விருந்தபோது டோஜோ ராணுவப் புலன் விசாரணை இலாகாவின் தலைமைப் பதவியிலிருந்தார். அப்போதுதான் முதலாவதாக டோஜோவுக்கு உண்மை அரசியலில் தொடர்பேற்பட்டது. ''மஞ்சூரியா சம்பவம்'' உலகத்திலேயே ''புதிய ஏற்பாடு'' என்று ஜப்பானில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தீவிர ராணுவ வாதிகளின் தலைவராயிருந்த ஸாடோ அராகி அபாரமாக யுத்த தளவாடங்களைப் பெருக்க வேண்டுமென்று கோரினார். உள்நாட்டில் ''புதிய அரசியல், பொருளாதார அமைப்பு'' ஏற்படவேண்டுமென்றும், அவர்கள் தெரிவித்தனர். ராணுவத்தை அரசியல் துறையில் புகுத்தி அதன் ஆதரவிலேயே பிரமாதமாகப் பிரசாரம் செய்யவும் ஆரம்பித்தார்கள். இந்த சமயத்தில் டோஜோ மேஜர் ஜெனரல் பதவிக்கு வந்துவிட்டார். மேற்சொன்ன பிரசாரத்திலே அவர் மிகவும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார்.

திட்டம் வகுத்த விவரம்

''1934-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 7-ந் தேதியன்று அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக யுத்தத்துக்காக ஏற்பாடுகள் செய்கின்றன'' என்று அறிவித்தார். [illegible] அவர் ஓர் திட்டத்தை வகுத்தார். ஆசியாக் கண்டத்தில் விஸ்தரிப்புக் கொள்கையை கையாளவேண்டுமென்ற ஆவல் மஞ்சூரிய சம்பவத்திலிருந்தே தெள்ளென விளங்கும். இது ஜப்பானின் மாறுபடாத கொள்கை. ஜப்பான் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இரண்டு. இருந்த இடத்திலேயே அடைத்


ஆர்ரி குவேரத்திங் கண்டிராக்டர் ஸ்ரீமான் ஜி. மணவாள நாயுடுவின் குமாரர் சிரஞ்சீவி ஜி எம் ஸ்ரீனிவாஸலு நாயுடுவுக்கும். சென்னை பிரசிடென்ஸி காலேஜ் ஸ்ரீமான் ஏ. கேசவலு நாயுடு குமாரத்தி சௌபாக்யவதி அனுசூயா தேவிக்கும் சென்ற 20—1—43-ல் சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள ''கனகவேல்'' கல்யாண மண்டபத்தில் விவாஹம் நடைபெற்றது.

சென்னையின் புதிய ஷெரீப்

சென்னையின் ஷெரீப்பாக நியமனம பெற்ற மிஸ்டர் லாடன். அப் பதவிக்குள்ள உடையுடன் எடுக்கப்பட்ட படம. பி. பி. பி.

துக் கிடப்பதா? அல்லது அபிவிருத்திக்கான மார்க்கத்தைப் பின்பற்றுவதா? இதர நாடுகள் நம்மை அலட்சியமாக எண்ணும்படி விடாமல் நாம் நமது வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டும்.” என்று டோஜோ பத்திரிகைக் கட்டுரையொன்றில் எழுதியிருக்கிறார்.

இந்தப் பிரசாரத்தின் பயனாக அநேகம் ஜப்பானிய ராஜதந்திரிகளும், மிதவாத அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டனர். டோஜோவுக்கு அடுத்தபடியாக உயர் பதவி வகித்த லெப்டினென்டு ஜெனரல் டெட்ஸுஸான் நகாதாவும் இந்தப் பிரசாரம் காரணமாகப் பலியானர். இதில் டோஜோவுக்கு நேரில்ஏதாவது ஏதாவது சம்பந்தமுண்டாவென்று நிர்ணயிப்பது சாத்தியமில்லை.

வாழ்க்கையில் 2-வது கட்டம்

டோஜோ ஜப்பானிய ரகசியப் போலீஸில் சேர்ந்த பிறகு “மஞ்சூரியாக் கும்ப”லுடன் சேர்ந்தார். அங்கு க்வான்டங் ராணுவத் தலைவராகப் பதவி ஏற்றார். இது டோஜோ வாழ்க்கையில் இரண்டாவது கட்டத்தின் ஆரம்பம்.

க்வான்டங் ராணுவத்தின் தலைமை அதிகாரியானவுடன் சீன மீது படையெடுப்பதற்கான திட்டங்களைத் தயாரித்தார். ஜப்பானில் இதைத்தான் ‘சீன சம்பவம்’ என்று கூறுகிறார்கள். வட சீனவில் நடந்த போராட்டங்களில் டோஜோவே போர்க்களத்தில் தலைமையேற்று பல யுத்த களங்களில் கலந்துகொண்டார். அங்குதான் இவருக்குப் பெரிய யுத்த தந்திரியென்ற புகழ் கிட்டியது. டோஜோ தலைமைக் காரியாலயத்திலிருப்பது உபயோககரமாகவிருக்குமென்று க்வாங்டன் ராணுவம் அபிப்ராயப்பட்டது. எனவே 1938-ம் வருஷம் டோஜோ டோக்கியோ திரும்பி யுத்த உதவி மந்திரியாகப் பதவி ஏற்றார். ராணுவத்துக்கு அதிகமாகத் தளவாடங்கள் வேண்டுமென்று அவர் வற்புறுத்தினர். 1938-ம் வருஷம் நவம்பர் மாதத்திலே கைத்தொழில் வாதிகள் மகாநாடு கூடியது. டோஜோ, ராணுவத்தின் கோரிக்கைகளை வெளியிடுகையில் சீனவுக்கெதிராகவும், ரஷ்யாவுக்கு எதிராகவும் இரு முனைகளில் போராட ஜப்பான் தயாராக வேண்டுமென்று தெரிவித்தார். அமெரிக்கா நடுநிலைமை வகிப்பதாகவிருக்கிறதேயன்றி “பழைய கால ஒப்பந்தங்களை” யெல்லாம் அனுஷ்டித்து நடக்க வேண்டுமென்று அது வற்புறுத்துகிறதென்றும், கிழக்கு ஆசியாவிலுள்ள நிலைமையை அங்கீகரிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணவில்லையென்றும் டோஜோ குறிப்பிட்டார். “அமெரிக்காவின் நடவடிக்கைகளைக் குறித்து நாம் ஜாக்கிரதையாகக் கவனித்துவர வேண்டும்” என்றும் தெரிவித்தார். அமெரிக்காவுக்கு எதிராக ஜப்பான் யுத்தத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதே இதன் பொருள்.

டோஜோவின் கோரிக்கைகள் மிகவும் கண்டிப்பாகவும் முக்கியமாகவும் இருந்ததால் வியாபார வட்டாரங்களில் அவர் விசேஷமாக வருத்தத்தை உண்டாக்கினர். இதன் காரணமாக டோஜோ அப்பதவியில் 7 மாத காலமே இருந்தார். பிறகு ராணுவ விமான இலாகாவுக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

தீவிர ஒழுங்கு முறை

டோஜோ தாம் வகித்த இரண்டு பதவிகளிலிருந்தும் அடைந்த அனுபவம் காரணமாக அவரும் அவரது கோஷ்டியாரும் வகுத்த திட்டம் உருப்பெறுவதில் இருக்கும் கஷ்டங்களை உணரும்படி நேர்ந்தது. இது போன்ற திட்டங்கள் பலிதமாகவேண்டுமாயின் அதற்குத் தனிப்பட்டவர் செயலோ ஒரு ராணுவத்தின் செயலோ மட்டும் போதாது. கண்டிப்பான ஒழுங்கு முறையுடனுள்ள ஜனங்களின் நடவடிக்கையினுல் தான் திட்டம் கைகூடி வருமென்பதை டோஜோ இப்பொழுது உணர்ந்திருக்கிறர். ஆனல் திட்டத்தில் ஒரு அணுவேயேனும் அவர் குறைக்கவில்லை. எனவே அவர் “இளம் அதிகாரிகள்” விஷயத்தில் தீவிரமான ஒழுங்கு முறையை அமுல் நடத்தினர். 1940-ம் வருஷம் ஜூலை மாதத்தில் இளவரசர் கோனுய் இரண்டாவது மந்திரி சபையை ஏற்படுத்தினர். அதில் டோஜோவை யுத்த மந்திரியாக விருக்கும்படி சொன்னர். ராணுவவிஷயத்தில் கீர்த்தி கிட்டியிருந்தமையால் அவர் சொன்னவற்றை ராணுவம் உடனே ஏற்றுக்கொண்டது ராணுவத்தின் அரசியல் நடவடிக்கைகளை வெகு கண்டிப்பான முறையில் டோஜோ மேற் பார்வையிட்டு வந்தார். ராணுவத்துக்கும் பத்திரிகைகளுக்கும் தொடர்பே இல்லாமல் செய்து வைத்தார். ராணுவத் தலைமை அதிகாரிகளுக்கும், ஸிவில்காரர்களுக்கு மிடையே சம்பந்த மிருப்பதற்காக மகாநாடுகளை மட்டும் நடத்தினர். சாம்ராஜ்ய ஆட்சி உதவிச் சங்கத்தை டோஜோ ஆதரித்தார். இது ஜப்பானுடைய பிரதம அரசியல் ஸ்தாபனம். இதன் தலைமைக் காரியாலயத்தில் டோஜோ கவுன்ஸிலராகச் சேர்ந்தார். மந்திரி சபையிடம் அவர் பின் வருமாறு தெரிவித்தார்:—

“தேசீய வாழ்வில் அனுவசியமாகவும் சில்லரையாகவும் தலையிட்டுக் கட்டுப்பாடுகள் விதிக்கும் முறையை விட்டொழிக்க வேண்டும்.”

பிரதம மந்திரி பதவி கிட்டியது

யுத்தக் கலையில் தேற வேண்டுமென்றும், உலகத்தில் ஜப்பானுக்குப் பிரதானமான அந்தஸ் கிட்டுவதற்கு அங்ஙனம் செய்ய வேண்டுமென்றும் ஜப்பானிய ராணுவ தளகர்த்தர்களுக்கு அவர் ஆக்ஞாபித்தார். ஜெர்மனி, இத்தாலி இவற்றுடன் முத்தரப்பு ஒப்பந்தம் செய்து கொண்டதில் தமக்குள்ள மகிழ்ச்சியையும் அவர் வெளியிட்டார்.

“மஞ்சூரியா சம்பவத்தின் 10-வது ஆண்டு விழாவின் போது டோஜோ உலகத்துக்கு ரேடியோ மூலம் ஒரு பிரசங்கம் செய்தார். அச்சம்பவம் காரணமாக ஜப்பானுக்கேற்பட்ட நிலைமையையும், அதற்கு முன்னிருந்த நிலைமையையும் அப் பிரசங்கத்தில் அவர் விளக்கினர்.

தமது மந்திரிசபையைப்பற்றி டோஜோ சந்தேகத்திற்கு இடமில்லாதபடி தெரிவிதது விட்டார். சர்வ பல யுத்தத்துக்காக இம்மந்திரிசபை ஏற்பட்டது. அவரைச்சுற்றி “மஞ்சூரியா கும்பல்” சூழ்ந்திருந்தது. “என்னுடைய கொள்கை வெட்டிப்பேச்சல்ல; செயல்தான்” என்று டோஜோ பிரகடனம் செய்தார். பிரசங்கங்கள் புரிவதெல்லாம் அந்நிய நாட்டு மந்திரி டோகோவின் வேலை; அது அவருடைய பொறுப்புக்விடப்பட்டது. இவர் சில தினங்களுக்கு முன் தான் ராஜிநாமாச் செய்தார்.

டோஜோவின் சக அதிகாரிகள் அவரது “கத்தி முனைக் கறுக்குள்ளது” என்பர். இந்த சொற்களை உபயோகித்தே நவம்பர் 20-ந் தேதியன்று ஜெனரல் டோஜோ பின் வருமாறு பேசினர்:—

“பிரதம மந்திரி என்ற ஹோதாவில் நான் “ப்ளேடு” (அலகு) மாதிரி இருக்கிறேன். இப் போராட்டத்தில் உபயோகிக்கப்படும் ஆயுதங்களுக்கு நான் நேத்திரங்கள் போலிருக்கிறேன். நீங்களெல்லோரும் உடல் போல இருக்கிறீர்கள். நீங்களெல்லோரும் இலலாமல் ‘ப்ளேடை’த் திறம்பட உபயோகிக்க முடியாது.”

டோஜோவின் பழக்கங்கள்

டோஜோ தனது சொந்தப் பழக்கங்களில் ஸாமுராய் தலைமுறையைப் பின் பற்றுகிறார். ரொம்ப தீவிரமாகவும், மனச்சாட்சியுடனும் வேலை செய்வார். அதிகாலையில் எழுந்திருப்பார். கொஞ்சமாகத் தான் சாப்பிடுவார். முக்கியமாகச் சுருட்டு மட்டும் பிடிப்பார். பிரதம மந்திரி பதவிக்கு வந்த பின்னர் தான் குதிரை ஸவாரி செய்ய ஆரம்பித்தார். குதிரை மீது ஏறிக்கொண்டு ஜனங்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைக் கவனிக்க நகரை வலம்வருவார். ஜபபானில் மீன் பஞ்சம் மிகக் கடுமையாக ஏற்பட்டது டோஜோவே நேரில் மீன் கடைக்குப்போய் மீன் தட்டு ஏற்பட்டதற்கான காரணத்தை விசாரித்தார். பெட்ரோல் தட்டு ஏற்பட்டதால் மீன் பிடிப்பது குறைந்து விட்டதென்று செம்படவர்கள் அவரிடம கூறினர்.

“பெட்ரோலா! நீங்கள் ஏன் சீக்கிரமாக எழுந்திருந்து கஷ்டப்பட்டு வேலை செய்யக் கூடாது?” என்றார் டோஜோ.

அடிக்கடி டோஜோ தொழிற்சாலைகளுக்கும் சுரங்கங்களுக்கும் செல்லுவார். அவ்விடங்களில் தொழிலாளர்களிடம் சென்று உற்பத்தியைப் பெருக்குமாறு கூறுவார். அவர் மனைவி “டோஜோ பலவீனமானவர்களிடம் பட்சமாக விருப்பார்” என்று கூறுகிறார். வேலைக்காரரை அவர் ஒரு பொழுதும் திட்டியதே கிடையாதாம்.!

—“பம்பாய் கிரானிகிள்”

கட்டுரையாளருக்கு.

★

“மித்திரன்” வாரப் பதிப்புக்குக் கட்டுரைகள், புகைப் படங்கள் ஆகிய வற்றை அனுப்புபவர்கள் அவை ஏற்கப்படா விட்டால் திருப்பியனுப்புவதற்காக ஸ்டாம்பு ஒட்டிய, விலாஸமெழுதிய கவரையும் சேர்த்தனுப்ப வேண்டும். இல்லையேல் அவை திருப்பி அனுப்பப்படமாட்டா.

அட்டைப் படம்

ராணி மங்கமாவில் நடிக்கும் வஸுந்தரா



சிறுவர் பகுதி

★

மட்டியிலும் கெட்டி

★

தி. அ. ராமசாமி பிள்ளை

ஒரு ஊரில் ஓர் பணக்காரன் இருந்தான். அவன் ப்ரம லோபி, அவன் பெயர் சாத்தரப்பன். அவன் மனைவி சாத்தரக்காள் அவனைப் பின்பற்றியவள். இவர்களுக்கு ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் வேண்டியதிருந்தது. அதற்காகச் சாத்தரப்பன் பல இடங்களில் விசாரித்துக் கடைசியாக ஒரு பையனைத் தேர்ந்தெடுத்தான். அந்தப் பையனே உலகம் இன்னதென்று அறியாதவன். மிகவும் குட்டை, புத்தியோ மிகவும் கட்டை. இவ்விதமான பையன் அகப்பட வேண்டுமென்று தான் அதிக முயற்சி செய்தான் அந்தப் பணக்காரன். ஏனென்றல் இவ்விதத் தன்மை யுடையவனுக இருந்தால் தான், தன் வீட்டில் நடக்கும் ரகசியத்தை அறிந்து வெளியிட முடியாது என்பது அவனுடைய எண்ணம்.

பையன் வீடு வந்த நாள் முதல் மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டான். அவன் தினசரி காலையில் மாடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் சென்று மாலையில் வீட்டுக்கு ஓட்டி வருவான். ஒரு நாள் அவன் மாடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லும்பொழுது வழியில் ஒரு சுண்டானைக் கண்டான். அவனுக்கு அதைப் பார்க்க அதிசயமாக இருந்தது. இன்னும் கொஞ்ச தூரம் சென்றபோது அங்கு ஒரு நெட்டைப் பனை மரத்தைப் பார்த்தான். இதைக் கடந்து இன்னும் கொஞ்ச தூரம் செல்லும்பொழுது ஒரு ஆந்தை பொந்துக்குள்ளே விழித்துக் கொண்டிருப்பதையும், இரண்டு மான்கள் ஓடுவதையும் கண்டான். இந்த அதிசயங்களை இதற்கு முன் அவன் பார்த்ததே இல்லை. அதனுல் அவ்வதிசயங்களை மனதில் பதித்துக் கொண்டான். இது தவிர நடக்கும் பொழுதும், உட்காரும் பொழுதும், சாப்பிடும் பொழுதும் கூட தான் கண்டவைகளை ஒரு பாட்டில் இசைத்துப் பாடிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அந்தப் பணக்காரன் தன் மனைவியையும், அப் பையனையும் வீட்டில் இருக்கும்படி சொல்லிவிட்டு ஏதோ ஒரு காரியமாக வெளியூருக்குச் சென்று விட்டான். அவன் வர இரண்டு நாட்களாயின. அவன் போன மறு நாள் இரவு இரண்டு திருடர்கள் அவனுடைய வீட்டில் கன்னம் வைத்துப் பொருளை எடுக்க முயற்சி செய்தனர். அதைக் கண்ட பையன் திருடர் வந்து கன்னம் வைக்கிருர்கள் என்று கத்தாமல் “சுண்டான் எலி போல துளைக்கிருண்டி தன்னனே! மன்னனுக்கொரு பாட்டு வந்து வாச்சுதடி தில்லாலே” என்று பாடினன். இதைக்கேட்ட திருடர்கள் இருவரும் எழுந்து நின்ருர்கள். அதைக் கண்ட பையன் “நெட்டைப் பனை போல நிற்கிருண்டி தன்னனே! மன்னனுக்கொரு பாட்டு வந்து வாச்சுதடி தில்லாலே” என்று பாடினன். இவன் பாடியதைக் கேட்ட திருடர்கள் ஒன்றும் தெரியாமல் ‘திரு திரு’வென்று விழித்தனர். இதைப் பார்த்த பையன் “பொந்துக்குள்ளே ஆந்தை போல முழிக்கிருண்டி தன்னனே! மன்னனுக்கொரு பாட்டு வந்து வாச்சுதடி தில்லாலே” என்று பாடினன். இதைக் கேட்டதும் திருடர்கள் ஓட்டம் பிடித்தார்கள். அதைக் கண்ட பையன் “மானும், கலையும் விழுந்தோடுதடி தன்னனே! மன்னனுக்கொரு பாட்டு வந்து வாச்சுதடி தில்லாலே!” என்ற பாட்டை இரவுமுழுவதும் பாடிக்கொண்டிருந்தான்.

மறுநாட் காலையில் வெளியூர் சென்றிருந்த பணக்கார எஜமான் வந்து சேர்ந்தான். அவன் வரும் பொழுதும் பையன் பாடிக் கொண்டே இருந்தான். அவன் பாடுவதைக்கேட்டு இன்னதென்று விளங்காத எஜமான் பையன் மேல் கோபம் கொண்டான். வீடு சென்றதும் இரவில் நடந்த விஷயம் தெரிய வந்தது. உடனே அவனுக்கேற்பட்ட அடங்காச் சந்தோஷத்தால் “மன்னனுக்கொரு பையன் வந்து வாச்சானடி தன்னனே! மதி கெட்ட மனைவியே நீ.மகிழாதேனே தில்லாலே” என்று பாடவும், மனைவி ஒரு குதி குதித்து ‘பையன் வந்த அதிர்ஷ்டத்தாலே பணம் பிழைத்தது தன்னனே! என் பதிக்கு ஒரு பாட்டு வந்து வாச்சுதடி தில்லாலே’ என்று பாடி மகிழ்ந்தாள்.

கல்கத்தாவில் ஜப்பானிய குண்டு வீச்சு

(1) கல்கத்தாவில் சமீபததில் ஜப்பானியர் குண்டு வீச்சுக்கு இலக்கான கட்டிடமொன்று. இதற்கு மேலெழுந்தவாரியாகச் சேதமேற்பட்டது. உள்ளே இருந்தவாகளுக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்படவில்லை.

(2) குண்டு வீச்சால் சிதைவுற்ற கட்டடச் சுவரின் தோற்றம.

கட்டு மரங்களைக் கொண்டுபோக புது வசதி



கட்டுமரங்களை ஆற்றின் வழியாக ஏற்றிச்செல்ல அமெரிககத் துருப்புகளுக்குப் புதிய வசதி கிடடியிருக்கிறது. மரங்களையெல்லாம் ஒனருகச் சேர்த்துப் பிணைத்து ஓர் மோட்டாரைககொண்டு அவற்றை இழுத்துச் செல்லலாம். 8 டன எடைவரையில் இம மாதிரி கொண்டுபோகலாமாம்.